Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...
C/348
SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 தை 14 வெள்ளிக்கிழமை (28.01.2011) பக்கங்கள் 12 ஓசை – 120

# ஆளும் கட்சியின் வேட்பு மனுக்கள் அனைத்தும் வடக்கில் நிராகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

**எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிட, வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உட்பட மேலும் மூன்று சுயேட்சைக் குழுக்களினதும் ஒரு அரசியல் கட்சியினதும் வேட்பு மனுக்கள் நிராகரிகப்பட்டதாக உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் நேற்று மாலை அறிவித்தார். யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் தொகுதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கலை நேற்றைய தினம் யாழ்ப்பாண அரச செயலகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய பிரதான கட்சிகள் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன.**

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் தொகுதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான மனுத்தாக்கலை நேற்றைய தினம் யாழ்ப்பாண அரச செயலகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய பிரதான கட்சிகள் தமது வேட்பு மனுத்தாக்கலைச் செய்தன.

இவ்வாறு வேட்பு மனுத்தாக்கல் இடம்பெற்றதை அடுத்து, வேட்புமனுக்களை ஏற்பது மற்றும் நிராகரிப்பது தொடர்பான அறிவிப்பை அரச அதிபர் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் ஆகியோர் நடாத்தினர்.

இதன்படி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்ற கட்சி, தேர்தல் திணைக்களத்தில் இதுவரை பதியப்படவில்லை எனவும், மாறாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்றே பதியப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனால் யாழ். மாவட்டம், கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கியதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட 19 வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதில் யாழ். மாவட்டத்தில் 16 வேட்பு மனுக்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 3 வேட்பு மனுக்களும் அடங்கும்.

மேற்படி வேட்பு மனுப்பத்திரங்களில் இக்கட்சியின் (United (11ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பு மனு நிராகரிப்பை எதிர்த்து நீதிமன்று செல்வோம்

### நீதி கிடைக்கும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி தேர்தலுக்காக வடக்கில் ஆளும் கட்சியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டமையை எதிர்த்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நீதிமன்றின் உதவியை நாடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் கட்சியின் பெயர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு (United People's Freedom Alliance)என்று நாம் குறிப்பிட்டிருக்கின்றோம். இதைத் தேர்தல் திணைக்களம் நிராகரித்திருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சர்ச்சையைத் தீர்க்க நாம் நீதிமன்றம் செல்லவுள்ளோம். இந்த விடயத்தில் நியாயம் கிடைக்கும் என்று எமது வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் நம்பிக்கையுடன் இருக்குமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மார்ச் 17இல் உள்ளூராட்சி தேர்தல்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் எதிர்வரும் மார்ச் 17ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. 301 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்த்லே எதிர்வரும் மார்ச் ·17ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இத்தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான கால எல்லை நேற்றுடன் நிறைவடைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு யாழில் பலப்படுத்தப்படுகிறது பாதுகாப்பு!

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கான நடவடிக்கைகளில் இராணுவத்தினரும் பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று இராணுவத்தின் யாழ். கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

இதற்காக யாழ்.நகர் உட்பட பல பகுதிகளில் இராணுவ படையணியினர் நிறுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களினால் இரவு வேளைகளிலும் ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், கடந்த 30 வருடகால யுத்தம் காரணமாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்த யாழ். மக்கள் தற்போது சுதந்திரத்தை அனுபவித்து வருகின்ற அதேவேளை, யாழ். குடாநாட்டில் இடம்பெற்றுவரும் குற்றச் செயல்களின்

(11ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயம்

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தின் கஹவத்தைப் பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலோடு தொடர்புடைய இரண்டு அரசியல் பிரிவு ஆதரவாளர்களே மோதிக் கொண்டனர்.

காயமடைந்தவர்கள் இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

## நாடு முழுவதும் நிராகரிக்கப்பட்ட —கட்சிகள் ஒரே பார்வையில்—

(கொழும்பு)


2011ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்ல்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது. நேற்றுப் பல முக்கிய கட்சிகள் தமது மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகங்களில் வேட்பு மனுத்தாக்கல் செய்தன.

12 மணியுடன் வேட்பு மனுத் தாக்கல் முடிந்ததை அடுத்து வேட்பு மனுக்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க கட்சிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதன் போது, கட்சிகள் முன்வைத்த எதிர்ப்புகளின் பிரகாரம் கீழ் கண்டவாறு கட்சிகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் - ஐ.ம.சு.கூ 16, அநுராதபுரம் - ஐ.ம.சு.கூ 02, கண்டி - ஐ.ம.சு.கூ 01, குருநாகல் - ஐ.ம.சு.கூ 01, மாத்தளை - ஐ.ம.சு.கூ 02, மொனராகலை - ஐ.ம.சு.கூ 02, நுவரெலியா - ஐ.ம.சு.கூ 02, பொலனறுவை - ஐ.ம.சு.கூ 01, ஐ.தே.க 02, காலி - ஐ.ம.சு.கூ 01, ஐ.தே.க 01, மட்டக்களப்பு- ஐ.தே.க 01, மன்னார் - ஐ.ம.சு.கூ 02, ஐ.தே.க 02, அம்பாறை - த.தே.கூ 01.

## தண்டனை வழங்கும் அதிகாரம் இராணுவ நீதிமன்றம் ஆகுமா?

### கேள்வி எழுப்புகிறார் சரத் என் சில்வா



(கொழும்பு)

தண்டனை வழங்கும் அதிகாரம் இருப்பதால் மாத்திரம் இராணுவ நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதிமன்றமா என்பது தொடர்பில் கேள்வி எழுவதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா இரண்டாவது இராணுவ நீதிமன்றத்திற்கு எதிராக தாக்கல் செய்திருந்த மனுமீதான விசாரணையின் போது, எழுந்த இராணுவ நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதிமன்றமா என்ற கேள்விக்கு உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள விளக்கம் தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நான் வழக்கின் தீர்ப்பை முழுமையாக படிக்கவில்லை. இராணுவ நீதிமன்றத்தினால் மரண தண்டனை கூட வழங்க முடியும் என்பதால், அதனை ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதிமன்றமாக (11ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தின் மற்றுமோர் அறுவடை ஆறாயிரம் பேர் விதவைகளாக்கப்பட்டுள்ளனர்!




(வவுனியா)

யுத்தம் காரணமாக வவுனியா மாவட்டத்தில் 6,000பேர் விதவைகளாக்கப்பட்டுள்ளதாக, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.

இவர்களின் வாழ்வாதாரம் பின்தங்கிய நிலையில் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்ற கைத்தொழில்கள் மற்றும் அரசாங்க ஒப்பந்தகாரர்களுக்கிடையிலான கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்டத்தில் 15,000 வேலையற்ற இளைஞர், யுவதிகள் உள்ளதாகக் குறிப்பிட்ட அவர், யுத்தம் காரணமாக பெற்றோரை இழந்த சிறுவர்கள் மற்றும் அங்கவீனர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதாகவும் கூறினார்.

யுத்தத்துக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழலையடுத்து, தற்போது முதலீட்டாளர்கள் வவுனியாவுக்கு வருகைதர ஆரம்பித்துள்ளதாகவும், மாவட்டத்தில் உல்லாசப் பயணிகளுக்காக விடுதிகள் அமைப்பதற்குப் பொருத்தமான இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.எம். சாள்ஸ் மேலும் தெரிவித்தார்.

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான திணைக்களத் தலைவர்கள் மற்றும் நகர அபிவிருத்தி ஆலோசனைசபை அங்கத்தவர்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2மணிக்கு மன்றத்தின் மாநாட்டு மண்டபத்தில் மன்றின் செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து நகர அபிவிருத்தி ஆலோசனைச் சபைக் கூட்டமும் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (11)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங் களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5மணி வரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவ பீடம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ்.மாநகர சபைப் பகுதி ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார்கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோணடாவில், கொட்டடி, கோம் பயன்மணல் பிரதேசம், யாழ்.பட்டணப் பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம தடைப்பட்டிருக்கும். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவும் மின்விநியோகம் வழங்கப்படலாம் என இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.



யாழ்.சுண்டுக்குழி விதான்ஸ் சந்தியில் அமைந்திருக்கும் மதகு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் புனரமைக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (52)


## தென்னை மீள்நடுகை காரைநகரில் அமோகம்

(யாழ்.நிருபர்)

காரைநகரில் சில இடங்களில் தென்னை பயிரிடப்பட்டு வருவதாகவும் தமக்குத் தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்குமாறு தென்னை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தென்னைச் செய்கையாளர் தெரிவித்துள்ளனர்.

காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் க.சோமசேகரம் வியாவில் ஐயனார் ஆலயச் சூழலில் தனிப்பட்ட முறையில் தென்னைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், இதுவரை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் எவரும் வருகை தந்து பார்வையிட்டு ஆலோசனை வழங்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (10)

## அபிவிருத்திக்கு அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

65 ஆண்டுகளாக யாழ். நகரில் இயங்கிவரும் திருவள்ளுவர் ச.ச.நிலையமும் அதன் கீழ் இயங்கும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், விளையாட்டுக் கழகம், இளைஞர் கழகம், சிறுவர் கழகம் ஆகியன இணைந்து யாழ். மாநகர சபை உறுப்பினரைக் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துத் தமது கிராமத்தின் வளர்ச்சி பற்றியும், சனசமூக நிலையத்தின் நிலைமை பற்றியும் கலந்துரையாடினர். அவர்களின் குறைகளைக் கேட்டறிந்த மாநகரசபை உறுப்பினர் எஸ்.விஜயகாந் அவர்கள் சன சமூக நிலையத்தின் வளர்ச்சிக்காக ஒரு தொகைப் பணத்தினை திருவள்ளுவர் சனசமூக நிலையத் தலைவர் சி.கௌரிகாசன் அவர்களிடமும், பொருளாளர் இ.ரகு அவர்களிடமும் கையளித்தார்.

## தேர்தலைக் கண்காணிக்க தயாராகும் அமைப்புக்கள்

(கொழும்பு)

முழுநாட்டையும் உள்ளடக்கும் வகையில் தேர்தல் கண்காணிப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகத் தேசிய தேர்தல் கண்காணிப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களிலும் தேர்தல் கண்காணிப்பாளர் கடமையில் இருப்பார் என்று பணியகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் நடமாடும் கண்காணிப்பு வாகனங்களும் பயன்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பருத்தித்துறையில் வீதி விபத்து; இளைஞர் ஒருவர் காயம்

(கரணவாய்)

பருத்தித்துறைச் சந்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் வீதி விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது-

பருத்தித்துறைச் சந்தைப் பகுதியில் இருந்து நெல்லியடி நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் எதிரே வந்த இன்னொரு மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

இதில் நெல்லியடி நோக்கி வந்துகொண்டிருந்த கந்தசாமி ஜெகன் (வயது-26) என்பவர் பலத்த காயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான விசாரணை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18)

## செயலமர்வு

சிந்தனைக்கூடம் யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனம் அரசுத்துறை, அரசசார்பற்ற நிறுவனங்களின் தற்கால அபிவிருத்தித் திட்டங்களுக்கு வழிகாட்டும் நோக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தின் வளங்கள், பயன்பாடு, அபிவிருத்தி வழிமுறைகள் எனும் தலைபபிலான இருநாள் செயலமர்வினை நடத்தவுள்ளது.

இச்செயலமர்வுகள் சனி மற்றும ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. எமது மக்களின் அபிவிருத்திப்பணி சிறக்க புலமையாளர்களும், திட்டமிடுவோரும், திட்டங்களை அமுல்படுத்துவோரும் ஒன்றுகூடும் இச்செயலமர்வில் பங்குகொள்ள விரும்புவோா தன்னுடன் தொடர்புகொள்ளும்படி சிந்தனைக்கூட செயலமர்வின் ஏற் பாட்டாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலைப்பீடம்
### ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் [MRTC]
**இதழியல் டிப்ளோமா [முழுநேரம்–இரண்டாண்டு]**
**மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இதழியல் டிப்ளோமா (முழுநேரம்-இரண்டு ஆண்டு) பயிற்சியில் இணைந்து கல்வி கற்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் ரூ.22,500.00 புலமைப்பரிசில் தொகையாக வழங்கப்படும்.

இதழியல் டிப்ளோமா (முழுநேரம்-இரண்டாண்டு) கற்கை நெறிக்குப் புதிதாக இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும். க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியுடையவர்கள் டிப்ளோமா கற்கைநெறிக்கும், புலமைப்பரிசிலுக்கும் விண்ணப்பிக்க முடியும்.


**விண்ணப்ப முடிவு திகதி:** 06.02.2011

விண்ணப்பப் படிவங்களையும், விபரங்களையும் கீழ் வரும் முகவரியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**இல.84, ஜும்மா பள்ளி ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல: 0212229873**

**பதிவாளர்.**
**27.01.2011**

(C/199)

கடந்த ஞாயிறன்று "ஆளுமை" தொலைக்காட்சி படத் தொடக்க வைபவத்தில் குருநகர் நாட்டுக்கூத்து மன்ற உபதலைவர் மா.மனுவேற்பிள்ளை மங்கல விளக்கேற்றுவதைக் காணலாம்.

மேற்படி மன்றம் "குநாம" என்னும் புதிய நிறுவனப் பெயரில் "பண்டாரவன்னியன் கதை"யைப் படமாக்க இருப்பது குறிப்பிடத்தக்கது. படத்தில் கலைஞர் கி.யேசுராசா மற்றும் கி.சுலோமன், கலைமாமணி கி.கிறிஸ்தோப்பர் ஆகியோரும் நிற்கின்றனர். (68)

## காரைநகரில் மேய்ச்சல் தரை

காரைநகரில் நெல்வயல்களில் பெரும் சேதத்தை உண்டுபண்ணும் கட்டாக்காலி ஆடு, மாடுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மேய்ச்சல் தரைகளை உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வட்டக்கிராய், திண்ணக்களி, வேதரடைப்பு, வெண்ணன் அடைப்பு போன்ற இடங்களில் மேய்ச்சல் நிலங்களை உருவாக்கித் தருமாறு இங்குள்ள விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (10)

குழந்தைகளை உண்மையாக உருவாக்கும் சிற்பி தாய் தான். எனவே, தாய்மார்கள் தங்கள் உரிமைகளை மிக்க கவனமாகப் பயன்படுத்தினால் பிறரால் மதிக்கப்படும் குழந்தைகள் உருவாகும்.

- கிரேக்கம் -

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## ஒத்துழைப்பு வேண்டும்

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்று வந்த கொள்ளை, திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஒன்பது பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து சுமார் நூறு பவுணுக்கு மேற்பட்ட நகைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

குடாநாட்டிலுள்ள பல்வேறு பகுதிகளிலும் இரவு, பகல் என்று பாராது கொள்ளை திருட்டு வழிப்பறி சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் மக்களை அதிர்ச்சிக்கும் அச்சபீதிக்கும் ஆளாக்கியிருந்தனர்.

இக்கொள்ளையர்களின் திருட்டுக் கைவரிசை பாதுகாப்புத் தரப்பினருக்குப் பெரும் சவாலாக இருந்து வந்துள்ளதுடன், பல்வேறு ஊகங்களுக்கும் இடமளித்திருந்தது.

இந்நிலையில் உஷார் அடைந்த பாதுகாப்புத் தரப்பினர் 24 மணிநேர ரோந்து நடவடிக்கைகளை ஆரம்பித்ததுடன், பொது மக்களின் ஒத்துழைப்பையும் கோரியிருந்தனர்.

திருட்டுச் சம்பவங்களினால் உறைந்துபோயிருந்த மக்கள் இராணுவம், பொலிஸ் கூட்டுரோந்து நடவடிக்கைகளுக்கு எந்தவிதமான எதிர்ப்பும் காட்டாமல் ஒத்துழைப்பு வழங்க முன்வந்திருந்தனர்.

பலநாள் திருடன் ஒரு நாளைக்குப் பிடிபட்டே தீருவான் என்று சொல்வார்கள். எப்படியோ ஒரு கள்வன் பிடிபட அவனோடு சேர்ந்த கும்பல் அப்படியே மடக்கிப்பிடிக்கப்பட்டுவிட்டது.

24 மணிநேர ரோந்து நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்ட கையோடு அடிக்கடி இடம்பெற்று வந்த கடத்தல், கொள்ளை, வழிப்பறிச் சம்பவங்கள் சற்றுக் குறைந்து காணப்பட்டதால் மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியிருந்தது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது குடாநாட்டில் அடிக்கடி இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியதை அடுத்து, அவற்றை இல்லாது ஒழிப்பதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டப்படத்தக்கது.

பாதுகாப்புத் தரப்பினரது துரித நடவடிக்கையை அடுத்து குடாநாட்டு மக்கள் அச்சமற்ற வாழ்வைத் தொடரக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் தனது மக்களுக்கு அவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டிய பொறுப்பு உண்டு என்பதை உணர்ந்து கொண்டதை அதன் நடவடிக்கைகள் எடுத்துக்காட்டுவதாகவுள்ளது.

கொள்ளைகளும், கொலைகளும், கடத்தல்களும் நடைபெற்றபின் அவற்றுக்குச் சோடனைகளைச் செய்து பெருப்பித்துக்காட்டி கண்டனம் தெரிவித்து அரசியல் இலாபம் தேட முயற்சிப்பவர்களுக்கு கொள்ளையர்கள் பிடிபட்டமை கசப்பாகவும் இருக்கக்கூடும்.

எவருக்கு எது எப்படி இருப்பினும், சந்தேகத்தின் பேரில் கொள்ளையர்கள் பிடிபட்டமை மக்களுக்கு மன ஆறுதலை அளிக்கக்கூடியதாக இருக்கும் என்பது மட்டும் திண்ணம்.

பாதுகாப்புத் தரப்பினரின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு மக்கள் தொடர்ந்தும் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவார்களானால், வன்முறைச் சம்பவங்களை இல்லாதொழிக்கலாம். இதற்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு வேண்டும்.

-ஆசிரியர்-

# எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் சாட்சியங்கள் பெறுவது பூர்த்தி

## நல்லிணக்க ஆணைக்குழு அறிவிப்பு



(கொழும்பு)

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பொது மக்களிடம் இருந்து சாட்சியங்களை இம்மாதம் 31 ஆம் திகதி வரை மாத்திரம் பெற்றுக்கொள்ள வுள்ளதாக ஆணைக்குழுவின் ஊடகப் பேச்சாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், பொதுமக்கள் எழுத்து மூலமாகவும் வாய்மூலமாகவும் வழங்கப்பட்ட சாட்சியங்களைப் பகுப்பாய்வு செய்து வகுத்த பின்னர் இறுதி அறிக்கையை தயாரிக்கும் முகமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் மே மாதம் 15 ஆம் திகதி அளவில் கையளிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

ஆணைக்குழு பெப்ரவரி முதலாம் வாரத்தில் தேவைப்படும் முக்கிய நபர்களிடமிருந்து மாத்திரமே சாட்சியங்களைப் பெறவுள்ளது.

அநுராதபுர மாவட்டத்தில் பயங்கரவாத அச்சுறுத்தலுக்குள்ளாகியிருந்த கிராமவாசிகளின் சாட்சியங்களை ஆணைக்குழு நாளை சனிக்கிழமை பெற்றுக் கொள்ளவுள்ளது.

அன்றைய தினம் காலை நேரத்தில் கிராமவாசிகள் வெலிகோய பொதுசனசமூக நிலையத்தில் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்கமுடியும்.

ஆணையாளர் வெலிகந்த, பொலனறுவை ஆகிய பகுதிகளில் எதிர்வரும் 30 ஆம் திகதி அவதானிப்புச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்ள இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

## வீரபத்திரர் ஆலயத்தில் வைரவர் சூலம் திருட்டு!

(கோப்பாய்)

கோப்பாய் தெற்கு வீரபத்திரர் ஆலயத்தின் வைரவர் சூலம் ஒன்று திருடப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கோயில் பூசகர் மாலையில் பூஜைக்காக கோவிலுக்குள் சென்றபோது வைரவர் சூலம் களவாடப்பட்டது தெரியவந்தது. முற்றிலும் செம்பினால் ஆன இவ்வைரவர் சூலம் உள் மண்டபத்தில் வைரவருக்குரிய இருப்பிடத்தில் கம்பிகள் பொருத்தப்பட்ட கதவுகளினால் வைத்துப் பூட்டப்பட்டிருந்தது.

முன் மண்டப வெளிக்கதவு திறந்திருந்த நிலையில் கோவில் வெளிக் கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது கோயிலுக்குள் நுழைந்தவர்கள் வைரவர் சூலத்தைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சில மாதங்களுக்கு முன்னரும் இக் கோவிலில் குத்துவிளக்குகள் போன்ற சில பொருட்கள் களவு போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கசிப்புடன் பெண் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுண்டுக்குளிப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு விற்பனை செய்த பெண்ணொருவர், கசிப்புப் போத்தல்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கடந்த 21 ஆம் திகதி மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தகவல் ஒன்றின் அடிப்படையில் குறித்த வீட்டை பொலிஸார் சோதனை இட்டபோது 14 போத்தல்களுடன் இருந்த கசிப்பை கைப்பற்றியதுடன் குறித்த பெண்ணையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பெண் நீதிமன்றில் பொலிஸாரால் ஆஜர் செய்யப்பட்டார்.

## மீள்குடியேற்றம் செய்த மக்களுக்கும் மனிதாபிமான உதவி தேவைப்படுகிறது



(கொழும்பு)

உள்நாட்டுப் போரினால் இடம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களை அந்நாட்டுஅரசு மீள்குடியேற்றம் செய்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உள்ளதெனக் கூறியுள்ள ஐ.நா. மனித உரிமைக்கான துணைப் பொதுச் செயலர் கேத்தரின் பிராக், மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் எதிர்காலத்திற்கு மிகப் பெரிய அளவிற்கு முதலீடு தேவைப்படுகிறது என்று கூறியுள்ளார்.

இலங்கையில் 3 நாள் பயணம் மேற்கொண்ட கேத்தரின் பிராக், நியூயோர்க்கில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் "போரின் முடிவிற்குப் பிறகு வன்னி முகாம்களில் அடைக்கலமான 3 இலட்சம் பேரில் 20 ஆயிரம் பேர் தவிர மற்றைய அனைவரும் முகாம்களில் இருந்து வெளியேற்றப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப் பட்டுள்ளனர்,ஆயினும் அவர்களின் வாழ்க்கை கடும் போராட்டத்தில் உள்ளது.

வன்னி முகாம்களில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள் அனைவரும் அவர்கள் வாழ்ந்த இடங்களுக்குக் கொண்டு சென்று குடியமர்த்தப்படவில்லை. பல்லாயிரக்கணக்கான மக்கள் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர்.

அவர்களுக்கும் மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகிறது. மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களுக்குத் தேவையான வசதிகளையும், உள்கட்டமைப்பு அரசு ஏற்படுத்தி வருகிறது என்றாலும், அவர்கள் வாழ்வதற்கு இருப்பிடங்களும், குடிநீரும், கழிவு வசதிகளும் மருத்துவ வசதிகளும் இல்லாத நிலை உள்ளது. அவர்களுக்குச் செய்ய வேண்டிய மனிதாபிமான உதவிகள் இன்னமும் அதிகம் உள்ளன.

இந்த மக்களின் வாழ்க்கை மிக ஆபத்தான நிலையில் உள்ளது. மக்கள் வாழ்விற்கான முதலீட்டில்தான் வடக்கு மக்களின் எதிர்காலம் உள்ளது. அவர்களுக்குத் தங்களுடைய வாழ்க்கையை முறைப்படுத்திக்கொள்ள, திறன் மேம்பாடும், வாழ்க்கை வசதிகளும், சமூக முன்னேற்றத் திற்கான திட்டங்களும் தேவை.

கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரண வசதிகள் செய்துதர 51 மில்லியன் டொலர்கள் தேவைப்படுகிறது என்று கூறியுள்ள கேத்தரின், அந்த நிதிக்கு ஐ.நாவின் அவசர சூழல் உதவி நிதியிலிருந்து 6 மில்லியன் டொலர்கள் அளிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

## 2 வெளிநாட்டு முதலீட்டு திட்டங்களுக்கு விற்கப்படும் காலிமுகத்திடல் வளாகம்

பாதுகாப்புச் சபையின் கீழுள்ள காலிமுகத்திடல் வளாகத்தை இரண்டு வெளிநாட்டு முதலீட்டு திட்டங்களுக்காக வழங்க அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. இதற்கமைய காலிமுகத்திடல் வளாகத்திலுள்ள பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி அலுவலகம், இராணுவத் தலைமையகம் மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் என்பவற்றை ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய அனைத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் பத்ரமுல்லை, அக்கரேகொட பகுதிக்கு மாற்றும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1,000 மில்லியன் டொலர் நேரடி முதலீட்டுடன் கூடிய இரண்டு திட்டங்களுக்காக இந்தக் காணி விற்பனைசெய்யப்படவுள்ளது. இதன்மூலம் கிடைக்கும் நிதியைக் கொண்டு குறிப்பிட்ட அலுவலகங்கள் மற்றும் வாசஸ்தலங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# முல்லையில் மீள்குடியேற்றப் பணிகள் துரிதமாக நடைபெற்றுவருகிறது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதாக மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.பத்மநாதன் தெரிவித்துள்ளார். அந்த அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஐந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 220909 குடும்பங்களைச் சேர்ந்த 68409 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளதாக அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான், கரைத்துறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய ஐந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இந்த மீள்குடியேற்றம் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு மீளக்குடியமரத் திரும்பியுள்ள மக்களின் குடியேற்றத்துக்கான வீடுகள் அரச, அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் அமைத்துக கொடுக்கப்பட்டுள்ளன.

இதனைவிட, முல்லைத்தீவு மாவட்டத்தில் மீளக்குடியேறி வரும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் பல்வேறு புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் வீதிகள், பாலங்கள் புனரமைப்பு, உரக் களஞ்சியங்கள் அமைப்பு மற்றும் பாடசாலைகள் புனரமைப்புப் போன்ற வேலைத்திட்டங்கள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.பத்மநாதன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இன்னும் மீள்குடியேற்றத்துக்கு உட்படாது எஞ்சியுள்ளோரையும் மீளக்குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## மாதாந்தக்கூட்டம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிலுள்ள முதியோர்கள் மற்றும் ஊனமுற்றவர்களுக்கான மாதாந்தக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் முதியவர்களுக்கான கூட்டம் காலை 9 மணிக்கும், ஊனமுற்றவர்களுக் கான கூட்டம் காலை 10 மணிக்கும் இடம்பெறவுள்ளது. இக்கூட்டத்திற்குச் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (104)

## அஞ்சலிக் கூட்டம்

இலங்கை வர்த்தகக் கழக வடபிரதேச முன்னாள் அமைப்பாளர் அமரர் பரராஜசேகர் மறைவை ஒட்டிய அஞ்சலிக்கூட்டத்தை நண்பர்கள் வட்டம் நடத்தவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.4 மணிக்கு யாழ்.வண்ணை நாவலர் வித்தியாலய மண்டபத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த ச.தியாகலிங்கம் தலைமையில் மேற்படி அஞ்சலிக் கூட்டம் நடைபெறும் அஞ்சலி உரைகளை தொழிற சங்கங்களைச் சார்ந்தவர்கள் நிகழ்த்துவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (68)

# வன்னியில் அறுவடையாகும் நெல்லை நாவற்குழியில் களஞ்சியப்படுத்த திட்டம்

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பெருநிலப்பரப்பில் அறுவடை செய்யப்படும் நெல் நாவற்குழி அரச களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டவுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், தற்போது அறுவடைக்காலம் ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் மேற்குறித்த இரண்டு மாவட்டங்களிலும் அறுவடை செய்யப்படும் நெல்லை களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகள் எதுவும் இல்லாத நிலை காணப்படுவதுடன், நெற்செய்கையாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து நாவற்குழி களஞ்சியசாலைக்கு விஜயம் செய்த இருவரும், நெல்லைக் களஞ்சியப்படுத்தப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பாக உலக உணவுத் திட்ட களஞ்சியக்காப்பாளர் மற்றும் மாவட்டச் செயலக களஞ்சியக் காப்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடியதன் பிரகாரம் அறுவடை செய்யப்படும் நெல்லை அங்கு களஞ்சியப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

# புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயத்தின் அபிவிருத்திச் சபைப் பொதுக்கூட்டம்

(அச்சுவேலி)


யாழ்.புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் எனப் பாடசாலை அதிபர் கு.ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

பாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாடுகள், மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள், எதிர்காலச் செயற்றிட்டங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட இருப்பதனால் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலதரப்பட்டவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (03)

# சிவாஜிலிங்கத்தின் மீள்இணைவு கூட்டமைப்பில் மாறுபட்ட கருத்து

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தமிழரசுக் கட்சியின் சார்பில் வல்வெட்டித்துறை நகரசபையில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடப்போவது தொடர்பாக தமிழ்தேசியக் கூட்டமைப்பு மாறுபட்ட கருத்தை வெளியிட்டுள்ளது.



இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிவில்லை எனக் குறிப்பிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் இது தமிழரசுக் கட்சியின் செயலாளர் குலநாயகத்துக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசாவுக்கும் சிவாஜிலிங்கத்துக்கும் இடையில் இடம்பெற்ற இணக்கம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடியே தீர்மானத்தை எடுக்கும் என்றும் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.



யா/யாழ்ற்ரன் கல்லூரி கனிஸ்ர பிரிவில் 17.01.2011 திங்கட்கிழமை சூரியப் பொங்கல் விழாவும், கால்கோள் விழாவும் நடைபெற்றது.
இதில் புதிய ஆண்டு ஒன்று மாணவர்கள் மலர்ச் செண்டு கொடுத்து வரவேற்கப்படுவதையும், சூரியப் பொங்கல் நிகழ்வையும் காணலாம். (50)

# கஞ்சா விற்பனை செய்த குற்றத்துக்காக இராணுவப் பொலிஸிற்கு விளக்கமறியல்

(சாவகச்சேரி)

கஞ்சா விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இராணுவப் பொலிஸார் ஒருவரை எதிர்வரும் இரண்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரை சாவகச்சேரி பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை வீட்டில் பொலிஸார் ஆஜர்படுத்திய போதே எதிர்வரும் இரண்டாம் திகதி வரை இவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

விடுமுறைக்காக வெளிமாவட்டத்துக்குச் சென்று வந்த இராணுவப் பொலிஸார் ஒருவர் சாவகச்சேரி நகரப் பகுதியில் கஞ்சா விற்பனை செய்து கொண்டிருந்தவேளை சாவகச்சேரிப் பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார். இதன்போது 500 கிராம் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

# இளம் குடும்பப் பெண்ணொருவரைக் கிளிநொச்சியில் காணவில்லை?

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் முதல் இளம்பெண்ணொருவர் காணாமற் போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமற்போயுள்ள பெண் கிளிநொச்சியின் நாச்சிக்குடா பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் அவர் ஒரு குழந்தையின் தாய் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. தனது உறவினர் ஒருவரின் புதுமனைப் புகுவிழாவிற்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய வேளையிலேயே அவர் காணாமற் போயுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. அது பற்றி உறவினர்களால் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமற் போயுள்ள பெண்ணின் கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வருவதுடன் அவர் தன் சகோதரி வீட்டிலேயே தங்கியிருப்பதாகவும் மேலும் தெரிய வந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையும் கிளிநொச்சிப் பிரதேசத்தில் சிறுவனொருவனைக் கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி பொதுமக்களின் உதவியால் முறியடிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# வல்லை கடனீரேரிப் பகுதியின் மீன்பிடித் தொழிலாளர் அதிகரிப்பு

வல்லை கடனீரேரிப் பகுதியில் மீன்பிடித் தொழிலாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

அண்மைய நாட்களில் தொண்டமானாறு கடனீர் ஏரிப் பகுதியில் அமைந்துள்ள தடுப்புக் கதவுகள் திறக்கப்பட்டிருந்த போது, அதிகளவான மீனினங்கள் மற்றும் நண்டு, இறால் ஆகியன இப்பகுதிக்கு வந்துசேர்ந்தமையினால் இப்பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இங்கு தடுப்புவேலி அமைத்து மீன்பிடியில் ஈடுபடுபவர்களைக் காட்டிலும் காலை மற்றும் மாலை வேளைகளில் வீச்சுவலை மூலம் மீன்பிடியில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையே மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றது. இப்பகுதியில் பிடிக்கப்படும் நண்டு, இறால் போன்றவற்றிக்கு அதிக கிராக்கி காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (03)

# தமிழ்மொழியுடனான ஆங்கிலக் கல்வியையும் சிறுபராயம் முதல் மாணவர்களுக்கு ஊட்டவேண்டும்

## முன்னாள் ஆரம்பக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுவாமிநாதன்

(அச்சுவேலி)

மாணவர்களுக்குச் சிறு பராயத்திலிருந்து தமிழ்மொழியுடன் ஆங்கில மொழியிலும் சம தேர்ச்சியைப் பெற்றுக்கொடுக்கக் கூடிய வகையில் ஆரம்பக் கல்வி ஊட்டப்பட வேண்டும்.

இதன்மூலம் அவர்களும் உலக அரங்கில் சம அந்தஸ்துடன் செலாற்றக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள முடியும். கல்வி முறையில் காலத்திற்குக் காலம் பல்வேறு மாற்றங்களும், விரிவாக்கங்களும் புகுத்தப்பட்டு வருகின்றது.

இவற்றிற்கெல்லாம் ஈடு கொடுக்க வேண்டுமெனில், அதற்காக ஆங்கிலத்தை யாவரும் கற்றறிந்தே ஆகவேண்டும் என முன்னாள் ஆரம்பக்கல்வி பிரதிக கல்விப் பணிப்பாளர் ம.சுவாமிநாதன் தெரிவித்தார்.

அண்மையில் அச்சுவேலி புனித தெரேசாள் கல்லூரியில் நடைபெற்ற தரம் 01 மாணவர்களின் கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

பாடசாலைகளில் ஒழுக்கம் என பது கல்வியுடன் சமநிலையில் பேணப்படவேண்டிய ஒரு விடயம். இதற்காகப் பல்வேறு செயற்பாடுகள் மாணவர்களுக்காக முன்னெடுக்கப்பட வேண்டும். கனிஷ்ட மாணவர்களுக்கு வழிகாட்டிகளாகத் திகழவேண்டியவர்கள் சிரேஷ்ட மாணவர்கள் என்பதால், சிரேஷ்ட மாணவர்களின் செயற்பாடுகள் எப்போதும் முன்மாதிரியானவையாக அமைய வேண்டும்.

இதற்குப் பாடசாலைச் சமூகம் என்ற வகையில் அதிபர், ஆசிரியர்கள் பொறுப்புணர்வுடன் செயலாற்ற வேண்டும். கல்வியில் அனைத்து மாணவர்களுக்கும் சம வாய்ப்பும், சம அந்தஸ்தும் வழங்கப்படவேண்டும்.

கற்க முடியாதவர்கள் என்று எந்தவொரு மாணவரையும் ஒதுக்கிவிட முடியாது. மெல்லக் கற்கும் மாணவர்களை இனங்கண்டு, அவர்களுக்கும் விசேட செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி, அவர்களையும் சமூகத்தில் முதன்மையானவர்களாகத் திகழச் செய்வதற்குக் கல்லூரிச் சமூகத்துடன் பெற்றோர்களும் இணைந்து உழைகக வேண்டும்.

பாடசாலைகளில் கல்வி, ஒழுக்கம் என்பவற்றிற்கு அடுதத படியாக இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் மென்மேலும் விருத்திசெய்யப்படவேண்டும். இணைப்பாட விதானச் செயற்பாடுகள் பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்கு அத்திவாரம் இடக்கூடிய ஒரு செயற்பாடு ஆகையால் இதனை ஒதுக்கிவிட நினைப்பது தவறான செயலாகும் என்றார்.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி மரிய றொசாரியோ தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கி அச்சுவேலிக் கிளையின் உதவி முகாமையாளர் திருமதி றொசட் தவநாயகம் கலந்து கொணடார். (03)

# உவர்நீர் தடுப்புக்கதவு மூடல் வழிந்தோட முடியாத வெள்ளம்

(அச்சுவேலி)

தொண்டமானாறு கடனீரேரிப் பகுதியில் அமைந்துள்ள சமுத்திர உவர்நீர் தடுப்புக் கதவுகள் மூடப்பட்டிருப்பதால், அச்சுவேலியின் பல தாழ்நிலப் பகுதிகளில் நீர் வழிந்தோட முடியாது தேங்கி நிற்பதாகப் பொதுமக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

சிலவாரங்களுக்கு முன்னர் இத்தடுப்புக் கதவுகள் திறக்கப்பட்டு இருந்தமையால் நீர் வழிந்தோடியபோதிலும் தற்சமயம் இக் கதவுகள் பூட்டப்பட்டிருக்கின்றது. இதனால் நீர் தேங்கி நிற்கின்றது.


அசசுவேலி தெற்கு, வடக்கு, ஆவரங்கால் கிழக்கு, வல்லை மாதுவில் வெளிப்பகுதி ஆகிய பிரதேசங்களில் உள்ள தாழ் நிலப்பகுதிகள் தொடர்ந்தும் வெள்ளக்காடாகக் காட்சியழிப்பதாகத் தெரிவிக்கும் பொதுமக்கள், இந்நீரை வெளியேற்றும் வகையில் சரியான மேற்பார்வையின் கீழ் இத்தடுப்புக்கதவுகள் பரிபாலிக்கப்பட வேண்டும் எனவும் மேலும் தெரிவிக்கின்றனர். (03)

# புதிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர் தெரிவு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

தலைவராகப் பதவி வழி அதிபர் இரா.ஜெயக்குமார், செயலாளராக சு.தேவராசா, பொருளாளராக ஆசிரியர் க.ஜெகதீஸ்வரன், உபசெயலாளராக மு.கதிர்காமநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன், ஆறுபேர் கொண்ட நிர்வாகக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.



தாளையடி றோ.க.த.க. பாடசாலை புதிய தற்காலிக கட்டடத் திறப்பு விழாவின்போது அதிபர் நா.கண்ணதாசன் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினர் அருட்தந்தை ஜேம்ஸ்நாதன் மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், விழாவில் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (70)

# திருத்தப்படுகின்றது மொந்திப்புலம் வீதி

(காரைநகர்)

காரைநகர் பிரதான வீதியிலிருந்து வயலுக்குச் செல்லும் மொந்திப்புலம் வீதி திருத்தப்பட்டு வருகின்றது.

கடந்த பல வருடங்களாக இந்த வீதி திருத்தப்படாமல் கிடந்ததனால் வயல் பகுதிக்குச் செல்லும் விவசாயிகள் பல்வேறு சிரமங்களையும் எதிர்நோக்கி வந்தனர்.

இந்த நிலையில் கடந்த வருடம் காரைநகர் பிரதேசசபை இவ்வீதியைத் திருத்துவதற்கு 15 லட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்திருந்தது. இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் பறிக்கப்பட்ட கற்கள் வீதிக்குப் போடப்பட்டுத் தார் ஊற்றும் பணிகள் ஆரம்பமாகவுள்ளன.

பிரதேசத்தின் பெரும்போக நெல் அறுவடைக்கு முன்னர் இந்த வீதி திருத்தப் பணிகள் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. (50)

# புழுதிக் காற்றுடன் பயணிக்கும் மக்கள்


(கொக்குவில்)

யாழ். வீதிகளில் பயணிக்க முடியாத அளவில் காற்றில் புளுதி அள்ளி வீசப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை வாகனங்கள் வேகமாகச் செல்லும்போது பாதையே தெரியாத அளவுக்குப் புகைமண்டலமாகப் புளுதி காறறில் மேலெழுவதாகவும், அதனால் மூக்கு, வாய் என்றில்லாமல் கண்களையும் மூட நேர்வதால், ஆபத்துகள் நேர்வதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கினறர்.

மேலும் புளுதி ஒத்துக்கொள்ளாத நோயாளர்களால் போக்குவரவில் ஈடுபடுவது பகீரதப் பிரயத்தனமாக இருந்து வருவதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (68)

# 25 வருடங்களுக்கு முன் காணாமற்போன கண்ணகை அம்மன் சிலம்பு கிடைத்தது



(கொழும்பு)

இலங்கையின் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற அம்மன் ஆலயங்களில் ஒன்றான காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து 25 வருடங்களுக்கு முன்னர் காணாமற்போன ஒற்றைச் சிலம்பு மீண்டும் கிடைத்துள்ளது.

1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் தமிழ் - முஸ்லிம் கலவரம் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

தனித் தமிழ்க் கிராமங்களில் ஒன்றான காரைதீவும் அதில் தாக்கப்பட்டது. கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து ஏராளமான பொருட்கள் கபளீகரம் செய்யப்பட்டன.

ஆனால் அம்மன் அருளால் அவற்றில் அநேகமானவை திரும்பக் கிடைக்கப் பெற்றுள்ளன.

இருப்பினும் அம்மனின் ஒற்றைச் சிலம்பு பற்றி எந்தத் தகவலுமே இதுவரை காலமும் இல்லாமல் இருந்தது.

இச்சிலம்பு பல பேரின் கைகளுக்கு மாறிமாறிச் சென்றிருக்கின்றது.

ஒரு மாதத்துக்கு முன் கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் வைத்தியர் ஒருவருக்கு இது கிடைக்கப் பெற்றது.

இத்தமிழ் வைத்தியர் இச்சிலம்பைக் காரைதீவு கிராமத்தைச் சேர்ந்த துளசி ரஞ்சன் - பராபரம் தம்பதிகளிடம் ஒப்படைத்துள்ளார்.

இவர்கள் இச்சிலம்பை இன்று வெள்ளிக்கிழமை ஆலய நிர்வாகத்திடம் சம்பிரதாயபூர்வமாக கையளிக்க உள்ளனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்னாள் எம்.பி க. பத்மநாதனின் சகோதரியே பராபரம் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய பலன்

(28.01.2011 வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புகள்**
விகிர்தி தை 14
இராகுகாலம் 11.06– 12.36, சுபநேரம் 6.36 –8.06,
நவமி, சித்தம் மு.ப. 9.00, விசாகம் மு.ப.11.43.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

–ஆதினி–

**மேடம்:–** மகிழ்வான சம்பவங்கள் இடம்பெறும், பணவரவு, காதல் வசப்படல்.

**ரிஷபம்:–** அன்பானவர்கள் பகைப்பர், தொழிற்கேடு, காரியத்தடை.

**மிதுனம் :–** சோதனைகள் மிகுந்தநாள், நண்பர் பகையாவர், தொழிலில்நட்டம்.

**கடகம்:–** வீட்டில் கொண்டாட்டம், தொழிற் சிறப்பு, பண வருகை.

**சிம்மம்:–** அரச பயம், திருடரால் தொல்லை, பொருள் இழப்பு.

**கன்னி :–** நலிந்தோர்க்கு உதவி, மதிப்பு அதிகரித்தல், நண்பர் சேர்க்கை.

**துலாம் :–** எதிலும் வெற்றி, பகைவரை வெல்லல், நண்பர் உதவி.

**விருச்சிகம்:–** பாராட்டப்படல், பலரும் உதவி செய்தல், கௌரவம் உயரல்.

**தனுசு:–** நிம்மதிப்பெருக்கு, தன தானியப் பெருக்கு, ஆலய தரிசனம்.

**மகரம்:–** தேகநல விருத்தி, விசேட உணவு உண்ணல், காரிய ஜெயம்.

**கும்பம் :–** ஏமாற்றப்படல், தொழிலால் நட்டம், மனைவி வழிப் பிரச்சினை.

**மீனம்:–** நினைத்த காரியச்சித்தி, சுபசெய்தி வரல், களியாட்ட விருப்பு.

# வவுனியா நீதிமன்றம் சென்று திரும்பிய 5தமிழ் அரசியற் கைதிகளை காணவில்லை



(கொழும்பு)

அநுராதபுர சிறைச்சாலையில் இருந்து வவுனியா நீதிமன்றம் சென்ற ஐந்து தமிழ் அரசியல் கைதிகளைக் காணவில்லையென அவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சம்பவம்பற்றித் தெரியவருவதாவது,

கடந்த 24ஆம் திகதி காலை அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்த பாஸ்கரன்,சசிகுமார், இராஜேந்திரன்,சந்திரபோஸ் (செல்வச்சந்திரன்), மரியதாஸ் என்ற ஐந்து தமிழ் அரசியல் கைதிகளும் வழக்கு விசாரணைக்காக வவுனியா நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அன்றைய தினம் பி.பகல் 4.00 மணியளவில் மீண்டும் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு கொண்டுவரப்பட்டனர். ஆனால் அப்போது குறித்த சிறைச்சாலையில் வன்முறைச் சம்பவம் இடம்பெற்றுக்கொண்டிருந்தனால் குறித்த ஐந்து கைதிகளும் எங்குகொண்டு செல்லப்பட்டார்கள் என்பது பற்றித் தெரியாதுள்ளதாக குறித்த கைதிகளின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா மற்றும் அநுராதபுர சிறைச்சாலைகளில் அவர்கள் இல்லையென சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவிப்பதாகவும் அப்படியானால் எந்தச் சிறைச்சாலைக்கு இந்தக் கைதிகள் கொண்டுசெல்லப்பட்டார்கள் எனத் தாங்கள் அறிய முடியாமல் இருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

# ஈராக் வேலைவாய்ப்பு கட்டுப்பாடுகள் நீக்கம்

(கொழும்பு)

ஈராக்கில் இலங்கையர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுக் கொள்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தும நீக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

ஈராக்கில் யுத்தம் ஆரம்பித்த காலத்தைவிட தற்போது அங்கு நிலைமை அமைதியாக இருப்பதனால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் டிலான் பெரேரானவினால் இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

ஈராக்கில் நிர்மாணத்துறை வளர்ச்சியடைந்து வருவதால் அதிக ஊதியத்துடனான வேலை வாய்ப்புகள் பெற வழியேற்படும் என கிங்ஸ்லி ரணவக்க மேலும் தெரிவித்தார்.

இதேவேளை முதற்கட்டமாக பெப்வரி மாதத்திலிருந்து ஈராக்கின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் வேலை வாய்ப்புப் பெறுவதற்கு அமைச்சு அனுமதி வழங்கும் எனவும் அவர் கூறினார்.

## மற்றொரு கைதியும் மரணம்

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவத்தில் காயமடைந்த மற்றுமொரு கைதியும் நேற்றுமுன்தினம் மரண மடைந்தார்.

காயமடைந்த நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனின்றி மரண மடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# பொய் வாக்குறுதிகளை வழங்கும் அரசினை தடுத்து நிறுத்தவேண்டும்



(கொழும்பு)

இன்றைய காலகட்டத்தில் அரச தரப்பினர் பிராடோ வாகனம் வாங்கும் நிலையில் உள்ளனர். ஆனால் அவர்களுக்கு பொதுமக்கள் குறித்த கரிசனையில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்து விட்டு வெளிவரும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இத்தேர்தலில் அரசின் நிலை குறித்து மக்கள் புரிந்திருப்பார்கள். ஆகவே பொய் வாக்குறுதிகளை வழங்கும் அரசினைத் தடுத்து நிறுத்தவேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார். வேட்புமனுத் தாக்கலைத் தொடர்ந்து தாம் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கப்பல் போக்குவரவு கல்விக்கூடம்

(கொழும்பு)

இலங்கையின் கப்பல் தொழில்துறையில் உள்ளவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கும் பொருட்டும், உலகின் கப்பல் போக்குவரத்துத்துறையின் நவீன யுக்திகளையும், உட்கட்டமைப்புக்களையும் கற்றுக்கொடுப்பதற்காகவும் கொழும்பில் கப்பல் போக்குவரத்துத்துறை கல்விக் கூடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இங்கு அளிக்கப்படும் நவீன முறையிலான தொழில்நுட்பப் பயிற்சியின் மூலம் கப்பல்களில் பணிபுரியும் மாலுமிகள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு பல துறைகளில் பயிற்சி அளிக்கப்படும்.

இதற்கமைய கப்பல்களில் இயந்திரங்களைத் திருத்துதல், தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்தல், காலநிலையைச் சரியான முறையில் அவதானித்து கப்பல் போக்குவரத்திற்கு சிறந்த வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல் போன்றவற்றிலும் இங்கு மாலுமிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

ஆசியாவிலேயே இதுபோன்ற கப்பல் போக்குவரத்துத் துறைக்கான கல்விக் கூடம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும். இந்தக் கல்விக்கூடம் காலப் போக்கில் உலகிலுள்ள முன்னணிக் கப்பல் போக்குவரத்து நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களைச் செய்து வெளிநாட்டு மாலுமிகளுக்கும் இங்கு பயிற்சி அளிப்பதற்காக வசதிகளைச் செய்து கொடுக்கப்படவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

# அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் கால் நடைகளுக்குப் பெரும் பாதிப்பு

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 91600 மாடுகள், எருமைகள்,38000 ஆடுகள். 200000 பறவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அவற்றில் எத்தனை விலங்குகள் உயிரிழந்துள்ளன என்பதை அதிகாரிகள் இன்னும் கணக்கிடவில்லை.

இது தொடர்பான கள மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விலங்கு வேளாண்மை மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் நிமல் சந்திரசிறி டெய்லி மிரருக்குத் தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் கால்நடைகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டதாகக் கூறிய அவர் மட்டக்களப்பு மாவட்டத்தின் தொப்பிகல போன்ற பகுதிகள் இன்னும் அடைய முடியாத நிலையில் இருப்பதாகவும் இதனால் வெள்ளத்தில் மூழ்கி இறந்த மிருகங்களின் சரியான எண்ணிக்கையை இனங்காண்பது சிரமமாகவுள்ளதாகவும் கூறினார்.

# நுரைச்சோலை அனல்மின் நிலைய முதற்கட்டப் பணிகள் பூர்த்தி

(கொழும்பு)


மூன்று கட்டங்களாகத் திட்டமிடப்பட்டுள்ள நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் முதற்கட்டப் பணிகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், இம் மாத இறுதிக்குள் மின் உற்பத்தியை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட்டுவரும் இவ் அனல்மின் நிலையத்தின் மூலம்,மின் உற்பத்தியின் போது ஏற்படும் பெருந் தொகையான செலவீனத்தைக் குறைக்க முடியும்.

மேலும் மின் உற்பத்தியின் போது வெளியேற்றப்படும் புகை சூழலுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில், சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படும். அதேவேளை இப் பிரதேசத்தில் தமது வீடுகளை இழந்தோருக்கு புதிய வீடுகள் வழங்கப்பட்டு மூவாயிரம் ஏக்கர் நிலப்பரப்பு விவசாயத்திற்கென வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் அனல் மின்நிலையத்தின் முதற்கட்ட நிறைவைத் தொடர்ந்து 300 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்பதோடு, மூன்று கட்டங்களும் நிறைவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து 900 மெகாவாட் மின்உற்பத்தி செய்யமுடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# கிராமங்களை அபிவிருத்தி செய்யவே உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியாம்



(கொழும்பு)

கிராமங்களை அபிவிருத்தி செய்து நாட்டை மேம்படுத்தும் நோக்குடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வதாக ஐ.ம.சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்திற்கான வேட்புமனுக்களை தேர்தல் செயலகத்தில் கையளித்த பின்னர் அமைச்சர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

இந்த நோக்கத்தை அடையக்கூடிய வேட்பாளர்களை மக்கள் சுதந்திர முன்னணி நிறுத்தியுள்ளது.

கிராமங்களை வலுப்படுத்துவதற்கு மகிந்த சிந்தனைக் கொள்கையை வெற்றிகரமாக அமுல் செய்வதற்கு இந்தத் தேர்தல் முக்கியமானது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதில் அமைச்சர் விமல் வீரவன்ச ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் வெற்றி பெறுவது நிச்சயம் எனத் தெரிவித்தார்.

# 20வயதிற்கு குறைந்த 30ஆயிரம் யுவதிகள் வருடாந்தம் கருத்தரிப்பதாகத் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் 20 வயதுக்கும் குறைந்த 30,000 யுவதிகள் கருத்தரிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதில் 2500 பேர் 16 வயதுக்கும் குறைந்த சிறுமிகள் என கர்ப்பிணிகள் மற்றும் சிறுவர் நல விசேட நிபுணத்துவ வைத்தியர் தீப்தி பெரேரா தெரிவித்தார்.

20 வயதுக்கு முன்னர் குழந்தை பெற்றுக் கொள்வது மருத்துவ ரீதியாக அனுமதிக்கக் கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிராமப் பிரதேசங்களில் அதிகளவு இவ்வாறான பிரசவங்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. குடும்ப நலன் மற்றும் பாலியல் கல்வி தொடர்பில் விரிவான விளக்கம் அளிக்கப்படவேண்டியது அவ்சியமானதென வலியுறுத் தப்பட்டுள்ளது.

# டெங்கு நோயால் நால்வர் உயிரிழப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் மட்டும் டெங்கு நோயினால் 4 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதில் 376 பேர் டெங்கு நோய் காரணமாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவற்றில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 149 பேரும் கம்பஹாவில் 49 பேரும் யாழ்ப்பாணத்தில் 33 பேரும், புத்தளத்தில் 20 பேரும் டெங்கு நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் கொழும்பு மாவட்டத்தில் அதிகம் பேர் நோய்த் தாக்கத்திற்குள்ளாகியுள்ளதாகவும் சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

# புனர்வாழ்விற்கு அனுப்பாமை காரணம் காட்ட நீதிமன்று பணிப்பு


(கொழும்பு)

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த முன்னாள் பெண் போராளியொருவரை புனர்வாழ்வுக்கு அனுப்புமாறு நீதிமன்றம் பணித்துள்ள போதிலும் அதனைச் செய்யத் தவறிய சிறைச்சாலையின் பெண்கள் பிரிவு அத்தியட்சகருக்கு அவரின் செயலின்மைக்குக் காரணம் காட்டுமாறு கொழும்பு நீதிவான் பணித்துள்ளார்.

புலிகள் இயக்கத்துடன் தொடர்படையவராக இருந்தவர் எனக்குற்றம் சாட்டப்பட்ட மேற்படி பெண்ணை, விசாரணையின் பின்னர் புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு நீதிவான் பணித்திருந்தார்.

ஆயினும் சிறைச்சாலை அதிகாரிகள், இந்த அறிவுறுத் தலை உதாசீனம் செய்திருந்ததை நீதிவான் அறிந்து கொண்டார். இதனால் சிறைச்சாலையின் பெண்கள் பிரிவு அத்தியட்சகர், ஏன் நீதிமன்றக் கட்டளையை செயற்படுத்த தவறினார் என காரணம் காட்டுமாறு கட்டளை பிறப்பித்துள்ளார்.

# கபிலன் நிதானமான துடுப்பாட்டம் சென் ஜோன்ஸ் வெற்றி நழுவியது



கபிலன்

(யாழ்ப்பாணம்)

கபிலனின் நிதானமான துடுப்பாட்டத்தின் மூலம் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணியின் வெற்றிவாய்ப்பு நழுவப் பட்டது.

இலங்கை பாடசாலைக் கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் 19 வயதுப் பிரிவின் 'பிரிவு மூன்று'க்கான கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடர் ஒன்றில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும், யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணியும் மோதின.

இரண்டு நாட்களைக் கொண்ட இந்த இனிங்ஸ் போட்டி கடந்த 24, 25ஆம் திகதிகளில் சென் ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென் ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்சிற்காகக் களமிறங்கிய மகாஜனாக் கல்லூரி அணி, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஜித் 28, டிலோஜன் 24, டிலக்ஷன் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் விதுசன் நான்கு, ஹரிவதனன், டக்சன், மதுசன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்சிற்காக களமிறங்கிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 308 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விதுசன் 83, அமிடயன் 72, ஹரிவதனன் 38, அட்ரியன் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டிலக்சன் நான்கு, டிலோஜன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

193 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்சை ஆடிய மகாஜனாக் கல்லூரி அணி, எட்டு விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், ஆட்டம் நிறைவுக்கு வந்தது. இதன் மூலம் இப்போட்டி வெற்றிதோல்வியின்றி நிறைவடைந்தது. இதில் கபிலன் 270 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 93 ஓட்டங்களைப் பெற்று சென் ஜோன்ஸ் கல்லூரி அணியின் வெற்றி வாய்ப்பை நழுவச் செய்தார். இருப்பினும் ஏழு ஓட்டங்களால் அவர் சதத்தைத் தவறவிட்டமை சக வீரர்களிடையே கவலையை ஏற்படுத்தியதை அவதானிக்க முடிந்தது. மற்றும் கோகுலன் 31, மதுசன் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிவதனன் நான்கு, அட்ரியன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (எஸ்)

## 31ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட ஆசிரியர்களுக்கான விளையாட்டு விழா அடுத்த மாதம் 19, 20, 21, 22ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதாக இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளவிரும்பும் ஆசிரியர்கள் வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்குரிய விண்ணப்பங்களை அந்தந்த வலயக் கல்வி காரியாலயங்களிலுள்ள உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் என்றும், ஆண்களுக்கான கிரிக்கெட், பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் மற்றும் ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும், மட்டுப்படுத்தப்பட்ட மெய்வல்லுநர் போட்டியும் நடைபெறும் என்றும் விளையாட்டுத்துறை அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நடைபெறவிருந்த இப்போட்டியே தற்போது நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்சியாளராக கிறிஸ்டன்?

(மும்பை)



உலகக் கிண்ணத் தொடருடன் இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகவுள்ள கிறிஸ்டன், மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்சியாளராகும் வாய்ப்பு அதிகம் இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, இந்திய அணியின் பயிற்சியாளர் பொறுப்பை விட்டு விலகும் கிறிஸ்டன், ஐ.பி.எல்.இல் தனது பணியைத் தொடரலாம் என்று தெரிகிறது. அவருக்கும், மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் சச்சின் டெண்டுல்கருக்கும் இடையே நல்ல நட்புறவு உள்ளது. எனவே வருகிற ஐ.பி.எல். தொடருக்கு முன்பாக மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்சிக்கான இயக்குநராக நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கேப்டவுனில் உள்ள கிளார்மொன்ட் கிரிக்கெட் கழகத்தில், சர்வதேச கிரிக்கெட் அக்கடமியைத் தொடங்குவது இன்னும் திட்ட அளவிலேயே இருப்பதால் மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்சியாளர் பொறுப்பை அவர் ஏற்பதற்கு நிறைய வாய்ப்பு இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வரலாற்றில் முதன்முறையாக வீதியோட்டப் போட்டி நிகழ்வு


(அச்சுவேலி)




யாழ். சிறுப்பிட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வரலாற்றில் முதல் முறையாக வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியை முன்னிட்டு ஆண் மற்றும் பெண் இருபாலாருக்குமான வீதி ஓட்ட நிகழ்வுகள் அண்மையில் நடாத்தப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பாடசாலையில் சுமார் 200 வரையான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றபோதிலும் இம்முறையே முதல் முறையாக வீதியோட்ட நிகழ்வுகள் நடாத்தப்பட்டுள்ளது என்றும் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் நீண்ட நாள் அபிலாசையைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே இவ்வீதியோட்ட நிகழ்வுகள் நடாத்தப்பட்டதாகவும் தெரிவித்த அதிபர் இதற்கு அச்சுவேலிப் பொலிஸார் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப் பிரிவினரும் தமது உதவிகளை வழங்கியிருந்ததுடன் பெற்றோர், பழைய மாணவர்களும் பெரும் ஆதரவை நல்கி உதவியதாகவும் மேலும் தெரிவித்தார். (03)

## முதல் முறையாக




அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டிக்கு முதல் முறையாகத் தெரிவான மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் சீனாவின் லீ நா. நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான வொஸ்னியாக்கியை எதிர்கொண்ட லீ நா, 3-6, 7-5, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார். சீன வீராங்கனை ஒருவர் அவுஸ்ரேலிய ஓப்பன் தொடரில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவது இதுவே முதல் தடவையாகும்.

வெற்றி குறித்துக் கருத்து வெளியிட்ட லீ நா, முதல் முறையாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது மகிழ்ச்சி. எதிராக ஆடு கின்றோம் என்பது முக்கியமல்ல. சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அதற்கேற்ற வகையில் ஆடும் பட்சத்தில் எங்கள் இலக்கை வெற்றிகொள்ள முடியும் என்றார்.

இதேவேளை, இந்தியாவின் மகேஷ் பூபதி, லியாண்டர் பயஸ் ஜோடி இரட்டையர் பிரிவின் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

# உலகக் கிண்ணத்தை வெற்றிகொள்ள திறமைக்கு ஏற்ப விளையாடவேண்டும்

(புதுடில்லி)



திறமைக்கு ஏற்ப நாங்கள் விளையாடினால் இந்த உலகக் கிண்ணம் நமக்குத் தான் என்று இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்டவீரர்களில் ஒருவரான கௌதம் கம்பீர தெரிவித் தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, நமது துடுப்பாட்ட வரிசை இதுவரை இல்லாத அளவுக்கு அதிரடியாக ஆடக்கூடிய பல துடுப்பாட்ட வீரர்களைக் கொண்டுள்ளது. பல்வேறு தட்பவெப்ப நிலையிலும், வித்தியாசமான சூழ்நிலைகளிலும் நமது துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்களைக் குவித்திருக்கிறார்கள். இது இந்தியாவின் மிகப்பெரிய பலமாகும். எந்த அணி நெருக்கடியைத் திறமையாகக் கையாள்கிறதோ அந்த அணி உலகக் கிண்ணத்தை வெல்லும். இதில் நல்ல விடயமாக கடந்த சில ஆண்டுகளாக நெருக்கடியான நேரங்களில் நமது அணி சிறப்பாக விளையாடி வந்தது.

முடிவு எப்படி இருக்கும் என்பது நமது கையில் இல்லை. ஆனால் களத்தில் நாங்கள் 100 சதவீதத்துக்கும் அதிகமாக எங்களது திறமையை வெளிப்படுத்துவோம். திறமைக்கு ஏற்ப நாங்கள் விளையாடினால் இந்த உலகக் கிண்ணம் நமக்குத் தான். உள்ளூர் ரசிகர்கள் நிறைய நெருக்கடி கொடுப்பார்கள். எதையாவது கண்டு அச்சப்படத் தொடங்கினால், தவறாகப் போய் விடும். அது அணியின் வெற்றியையும் பாதித்து விடும் என்றார்.

# தென்னாபிரிக்க மண்ணில் இம்முறை வியக்கத்தக்க வகையில் விளையாடினோம்


(மும்பை)



கடந்த சில தொடர்களை விட, தென்னாபிரிக்க மண்ணில் இம்முறை வியக்கத்தக்க வகையில் விளையாடினோம். ஒருநாள் தொடரை வென்று இருந்தால் முத்தாய்ப்பாக இருந்திருக்கும். அடுத்து உலக கிண்ணத் தொடர் வரவுள்ள நிலையில், அது குறித்து தொடர்ந்து நினைத்துக் கொண்டிருக்க முடியாது என அதிரடி வீரர் யூசுப் பதான் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: உலகக் கிண்ணத் தொடரில் நெருக்கடி குறித்தெல்லாம் அதிக கவலையில்லை. இறைவன் கொடுத்த இயற்கையான திறமையை நம்பினால் போதும், மற்றவை தானாக நடக்கும். இந்திய அணிக்காக எந்தச் சிக்கலும் இல்லாமல் விளையாட வேண்டும். அணி வெற்றி பெறும் வரை, களத்தில் துடுப்பாட்டம் செய்ய வேண்டும் என நினைத்துள்ளேன். உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பான மற்றும் மோசமான நேரங்களில் ரசிகர்கள் ஆதரவு தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன் என்றார்.

# சூழ்நிலையைப் பொறுத்தே வீரர்கள் தெரிவு இடம்பெறும்



(கேப்டவுன்)

மைதானத்தின் தன்மை, எதிரணியின் பலம், பலவீனத்தின் அடிப்படையில் ஒவ்வொரு போட்டிக்கு விளையாடும் 11 வீரர கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்று தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித் ததாவது: உலகக் கிண்ணத் தொடரை கருத்தில் கொண்டு, இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் தாகிருக்கு வாய்ப்பு வழங்கவில்லை. இவர், தனது முதல் சர்வதேச போட்டியை உலகக் கிண்ணத் தொடரிலிருந்து தொடங்கவுள்ளார். இதன்மூலம் இவரது பந்துவீச்சு குறித்து எந்த அணியும் அறிந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பொதுவாக இந்திய மைதானங்கள் துடுப்பாட்டத்திற்கு நல்ல ஒத்துழைப்புத் தரும். அதேவேளையில் சுழற்பந்துவீச்சுக்குச் சாதகமாகவும் இருக்கும்.

உலகக் கிண்ணத் தொடருக்கான தென்னாபிரிக்க அணியில், துடுப்பாட்டம், பந்து வீச்சு என அனைத்திலும் சிறந்த வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். எனவே மைதானத்தின் தன்மை, எதிரணியின் பலம், பலவீனத்தின் அடிப்படையில் ஒவ்வொரு போட்டிக்கு விளையாடும் 11 வீரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்றார்.

# எகிப்திய ஜனாதிபதிக்கெதிராக அந்நாட்டு மக்கள் ஆர்ப்பாட்டம்

(கெய்ரோ)

**எகிப்தில் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக ஆட்சி செய்து வரும் ஜனாதிபதி முபாரக்கிற்கு எதிராக அந்நாட்டு மக்கள் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**

முபாரக்கின் ஆட்சியில் நாட்டில் பொருளாதார சீரழிவு ஏற்பட்டுள்ளது. வறுமை மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம் தலை விரித்தாடுகிறது.

எனவே அதிபர் ஹோஸ்னி முபாரக் பதவி விலக வேண்டும். மேலும் நாட்டின் பொருளாதார நிலையைச் சீரமைக்க வேண்டும் என வலியுறுத்தி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் தலைநகர் கெய்ரோவில் நடந்தது. இதைத் தொடர்ந்து அங்கு 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் தண்ணீரைப் பீய்ச்சி அடித்தனர்.

கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். இருந்தும் போராட்டத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அங்கு நடைபெறும் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்து கலவரமாக மாறும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதேவேளை, ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எகிப்திய உள்துறை




அமைச்சகம் எச்சரித்துள்ளது. எவ்வித போராட்டத்துக்கும் ஆர்ப்பாட்டப் பேரணிகளுக்கும் நாட்டில் அனுமதி இல்லை எனவும், மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறைத்தண்டனை விதிப்பு

(வொஷிங்டன்)

இந்தியாவில் மும்பையை பூர்வீகமாகக் கொண்ட நோசிர் கவுடியா (66), அமெரிக்க ராணுவத்தில் கடந்த 1968 முதல் 1986 வரை பணியாற்றினார். ஹபி-2 போர் விமானம் தயாரிப்பில் பொறியியலாளராகச் செயற்பட்டார். இந்த நிலையில், சீனாவிடம் ரூ.66 லட்சம் பணத்தை பெற்றுக் கொண்டு சுமார் 2 ஆண்டுகளாக விமானத் தயாரிப்பு ரகசியங்களைத் தெரிவித்ததாகக் கைது செய்யப்பட்டார்.

அகச்சிவப்பு கதிர் வீச்சு ராடாரில் சிக்காமல் செல்லும் விமானம், குறைவான வெப்பநிலையில் பறக்கும் விமானம் போன்றவற்றைத் தயாரிக்கும் ரகசியங்களை சீனாவிடம் கவுடியா தெரிவித்துள்ளார்.

இது குறித்த வழக்கு, வொஷிங்டன் நீதிமன்றில் நடைபெற்று வந்தது. தற்போது விசாரணை முடிந்த நிலையில், நோசிர் கவுடியாவுக்கு 32 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து நீதிபதி சூசன் ஒகி உத்தரவிட்டார்.

தீர்ப்பளித்தபோது எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் கவுடியா அமைதியாக இருந்தார். ஏற்கனவே, 5 ஆண்டுகளை சிறையில் கவுடியா கழித்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிலக்கரி சுரங்கத்தில் வெடிவிபத்து கொலம்பியாவில் 21 பேர் உயிரிழப்பு



(சான்டன்ஸ்டர்)

கொலம்பியா நாட்டில் உள்ள சான்டன்ஸ்டர் என்ற இடத்தில் நிலக்கரிச் சுரங்கம் உள்ளது. அங்கு நூற்றுக்கணக்கான ஊழியர்கள் நிலக்கரியை மின்சார கருவிகள் மூலம் வெட்டி எடுத்துக்கொண்டிருந்தனர். அப்போது சுரங்கத்தில் இருந்து திடீரென மீத்தேன் வாயு கசிந்தது.

இதனால் அதில் தீப்பற்றி பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. இதில் சுரங்க ஊழியர்கள் சிக்கி கொண்டனர். அவர்களில் 21 பேர் வெடி விபத்தில் சிக்கி உயிர் இழந்தனர். 20இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அங்கு மீட்புப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. அந்தச் சுரங்கத்தை உடனடியாக மூடும்படி கொலம்பியா அரசு உத்தரவிட்டுள்ளது.

## பின்லேடன் பாதுகாவலருக்கு ஆயுள் தண்டனை விதிப்பு




(நியூயோர்க்)

பின்லேடனின் பாதுகாவலர் அகமது கல்பான் கைலானி. 1998ஆம் ஆண்டில் கென்யா, தான்சானியா ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்க தூதரகங்களை அல்கொய்தாவினர் தகர்த்தனர். இந்த சம்பவங்களில் 224 பேர் பலியானார்கள்.

இந்தத் தாக்குதல்களில் கைலானியும் பங்கு கொண்டிருந்தார். இவர் பாகிஸ்தானில் பதுங்கி இருந்த போது 2004ஆம் ஆண்டு பிடிபட்டார். அவர் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவரை குவாண்டனமோ சிறையில் அமெரிக்க அடைத்து வைத்து சித்திரவதை செய்தது. பிறகு இவர் அமெரிக்கா கொண்டு வரப்பட்டார். அவர் மீது அமெரிக்க நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

குவாண்டனமோ சிறையில் சித்திரவதை அனுபவித்ததால், அவருக்கு லேசான தண்டனை கொடுக்கும் படி அரசாங்க நீதிபதி கேட்டுக்கொண்டார். ஆனால் நீதிபதி அதற்குச் சம்மதிக்கவில்லை. அவருக்கு ஆயுள் தண்டனை விதித்தார்.

## 6000 ஊழியர்களைச்சேர்க்க கூகுள் இணையம் திட்டம்

Google™

(நியூயோர்க்)

இன்டர்நெட் சர்ச் இன்ஜின் ஜாம்பவானான கூகுள் நிறுவனம், இந்த ஆண்டில் புதிதாக 6200 பேரை பணிக்கு அமர்த்தப் போவதாக அறிவித்துள்ளது. அமெரிக்காவில் வேலை வாய்ப்பை அதிகப்படுத்தும் வகையில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.


ஒன்லைன் சேர்ச் மற்றும் விளம்பரத் துறையில மேலும் வலிமையடைய இளமையும், புதுமையும் நிறைந்த ஊழியர்கள் தேவை என்றும், அதற்காகத்தான் புதிதாக 6000 பேருக்கு மேல் பணியமர்த்த திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது. மேலும் விரைவில் கம்ப்யூடிங், தொலைத் தொடர்பு மற்றும் ஊடகத் துறைகளில் கூகுள் நிறுவனம் கால்பதிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய, சீன நாடுகளிடம் அமெரிக்கா தோற்கும் அபாயம்

(வொஷிங்டன்)

இந்திய, சீன நாடுகளிடம்அமெரிக்கா தோல்வியடையும் அபாயம் உள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்தார்.

அமெரிக்கப் பாராளுமன்றத்தில் வருடாந்திர உரை நிகழ்த்துவது வழக்கம். அதன் படி ஒபாமா நேற்று முன்தினம் உரையாற்றினார். தனதுரையில்: இந்தியா சீனா போன்ற நாடுகளில் பெற்றோர் தங்கள் குழந்தைகளை நன்றாகவும் மிக சீக்கிரமாகவும், நீண்ட காலத்துக்கும் படிக்க வைக்கிறார்கள். அதோடு அவர்கள் கணிதம், அறிவியல் ஆகிய பாடங்களில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். இந்த நாடுகள் ஆராய்ச்சி மற்றும் புதிய தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் அதிக முதலீடு செய்து வருகின்றன. இவற்றுக்கு மாறாக அமெரிக்காவில் கணிதம், அறிவியல் ஆகிய படிப்புகளின் தரம் மிகக்குறைவாக உள்ளது. மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் அமெரிக்க கல்வி பின் தங்கி உள்ளது. ஆராய்ச்சி, தொழில் நுட்பம், கல்வி ஆகிய துறைகளில் அமெரிக்கா தோற்கடிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று தெரிவித்தார்.



# மனித சமுதாயத்தைப் பண்படுத்த ஆன்மீகம் ஒன்றாலேயே முடியும்




மனிதர்களைப் பண்படுத்தி நல்வழியில் கொண்டு செல்லுவதே ஆன்மீகம். படிப்படியாக சிற்றின்பப் பிடியில் இருந்து எம்மை மீட்டு பேரின்பத்தை நோக்கி அழைத்துச் செல்வதே அதன் குறிக்கோள்.

ஆனால் ஆன்மீகத்தைத் தேடிப் போகும் பக்குவத்தில் தான் நாம் இல்லை.

இன்று வழிபாட்டுத் தலங்களிலேயே "எமது தெய்வம் மட்டுமே, உண்மையானது மற்றவை அனைத்தும் பொய்யானது" என்று பிழையான முறையில் பிரசாரங்கள் நடைபெறுகின்றன. இதனால் சகோதரத்துவம் கெட்டுப்போகின்றது.

ஆன்மீகம் யாரையும் கஷ்டப்படுத்துவதற்காகவோ, பயமுறுத்துவதற்காகவோ அல்ல. மனித சமுதாயத்தைப் பண்படுத்தி நல்வழியில் செல்லவே ஆன்மீகம் உதவுகிறது. ஆன்மீகத்திற்கு சாதி, சமய, இன, மொழி வேறுபாடு கிடையாது.

அவரவர் தன் தன் தெய்வத்தை முழுமையாக அண்டினாலே போதும். ஆனால் நாமோ அந்தத் தெய்வம் அது தருகிறதாம், இந்தத் தெய்வம் இது தருகிறதாம் என்று சொல்லி எதிலேயுமே நிலையில்லாமல் பறந்து திரிகிறோம்.

கடைசியில் எதுவுமே நிலையில்லாமல் சோர்ந்து விடு கிறோம். ஒன்றையே நம்பு, அதனையே முழுமையாகப் பற்றிக்கொண்டால் இறைவனை அடையலாம் என்பதை நாம் மறந்துவிடுகிறோம்.

மக்கள் தம்மனதை, தாமே கட்டுப்படுத்திக் கொண்டு இன்பமாக வாழத்தெரியாமல் மனத்திற்கு இரையாகி மனம் போனபடி வாழத் தொடங்கி பல அல்லல்களுக்கு ஆட்பட்டுத் துடிக்கிறார்கள். இன்றைய மனித குலத்தின் சோகக்கதை இது. அறநெறிக்கும், ஒழுக்கத்திற்கும் முக்கியத்துவம் தராமல் பணத்திற்கும் ஆடம்பரத்திற்கும் அடிமையான இளைஞர்கள் வழி தெரியாமல் பாழாகி வருகிறார்கள்.

சிற்றின்ப மோகங்கள் இளைய தலைமுறையின் அறிவாற்றல்களை மழுங் கவைத்துக் கொண்டிருக்கின்றன.

மனம் போன போக்கெல்லாம் போய் அலைந்து திரிந்து சூடுபட்ட பிறகு தற்கொலை முடிவுக்கு வரும் இன்றைய சமுதாயத்தை நெறிப்படுத்த ஆன்மீகம் ஒன்றாலேயே முடியும்.

மேலைநாட்டு நாகரீகம் மக்கள் மனதில் மோக முட்களையும், ஆடம்பரவாழ்வியல் வேட்கையையும் வளர்த்து மனிதர்களை அடிமையாக்குகிறது.

ஒழுக்கத்தையும் அறக்கோட்பாடுகளையும் புறக்கணிக்கச் செய்து மக்களை "விலங்கு நிலைக்குத் தாழ்த்திவிட்டது" என்றார் காந்தியடிகள். அறக்கோட்பாடுகள் புறக்கணிக்கப்பட்டு வந்ததாலேயே காந்தியடிகள் மேலைநாட்டு நாகரீகத்தை சாத்தானின் நாகரீகம் என்றார்.

நாம் இன்று நம்முன்னோர்களைவிட பல வசதிகளைப் பெற்றுள்ளோம்.

ஆனால் அவர்களிடம் இருந்து மனநிறைவான வாழ்க்கை இன்று நம்மிடம் இல்லை. நாம் பணம், ஆடம்பரம், பதவி மற்றும் சிற்றின்பங்களில் லயித்திருக்கிறோமே தவிர ஆன்மீகத்தில் நாட்டம் குறைந்துவிட்டது.

இன்று ஆன்மீகம் வெறும் மேடைப்பேச்சுக் களுக் கும் விதண்டாவாதங்களுக்கும் மட்டுமே உபயோகப்படுகின்றது.

**தமிழ்த்தென்றல், சிறப்புமலர்**

# தே. மு . தி .கவுடனான கூட்டணியே சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெறும்



(புதுடெல்லி)

**தே.மு.தி.கவுடன் இடம்பெறும் கூட்டணியே வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் வெற்றி பெறும் என்று அக் கட்சியின் தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.**

பிற கட்சிகளில் இருந்து விலகிய ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தே.மு.தி.க.வில் சேரும் நிகழ்ச்சி சென்னை கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

அந்த நிகழ்ச்சியில் விஜயகாந்த் பேசும்போது,

நிவாரணக் கடைகளில் விற்கப்படும் உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு விலையில் ரூ.10 குறைக்கப்படும் என முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார். இதற்கு முன்பு விலையைக் குறைக்காதது ஏன்? தேர்தல் வருகிறது என்பதால் பருப்பு விலையைக் குறைத்ததாகக் கூறி மக்களை ஏமாற்ற கருணாநிதி முயல்கிறார். இதேபோல் தக்காளி, வெங்காயம் விலையைக் குறைக்காதது ஏன்?

இம்மாதம் 30ஆம் திகதி நடை பெறும் முதல்வர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதாகக் கூறி கருணாநிதி டில்லிக்குச் செல்கிறார். கடந்த ஆண்டு நடைபெற்ற முதல்வர்கள் மாநாட்டுக்கு அவர் செல்லவில்லை.

இப்போது அவர் மாநாட்டுக்காகச் செல்லவில்லை. காங்கிரஸ் கட்சியுடன் தொகுதிப் பங்கீடு பற்றி பேசுவதற்காகவே டில்லி செல்கிறார்.

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்கவோ, தமிழகத்தின் நதிநீர் பிரச்னைகளுக்காகவோ முதல்வர் கருணாநிதி டில்லி சென்றதில்லை. இதற்கு முன்பு, தனது குடும்பத்தினருக்கு மத்திய அமைச்சரவையில் பதவி வாங்குவதற்காக டில்லி சென்றார். இப்போதும், அதுபோலவே தேர்தல் கூட்டணி பற்றிப் பேசுவதற்காக டில்லி செல்கிறார்.

முதல்வர் பதவியில் இருப்பதைவிட, தி.மு.க.வின் தலைவர் என்ற பொறுப்பில் இருப்பதையே பெரிதாகக் கருதுவதாகக் கருணாநிதி கூறியுள்ளார்.


இனி அவர் தி.மு.க.வின் தலைவராக மட்டும்தான் இருக்க முடியும். மீண்டும் அவரால் முதல்வராக முடியாது. வரும் தேர்தலில் தி.மு.க.வுக்கு மக்கள் சரியான பாடம் புகட்ட வேண்டும்.தே.மு.தி.க. யாருடன் கூட்டணி அமைக்க வேண்டும் என்பது பற்றி சேலம் மாநாட்டில் தொண்டர்களின் கருத்தைக் கேட்டறிந்தேன். மாவட்டச் செயலாளர்கள், மாநில நிர்வாகிகளின் கருத்துகளையும் கேட்டறிந்துள்ளேன். யாருடன் கூட்டணி என்பது பற்றிச் சரியான நேரத்தில் அறிவிப்பேன்.

மக்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கும் கட்சிகளுடன் தான் கூட்டணி அமைப்பேன். கூட்டணிக்காகத் தொண்டர்களை யாரிடமும் அடகு வைக்க மாட்டேன். தே.மு.தி.க. யாருடன் கூட்டணி அமைக்கிறதோ, அந்தக கூட்டணிதான் வெற்றிக் கூட்டணியாக அமையும் என்று பேசினார்.




# சடலங்களை பெருச்சாளி தின்றதால் உறவினர்கள் போராட்டத்தில் குதிப்பு

(நகரி)



வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்ட இரண்டு சடலங்களை பெருச்சாளிகள் தின்றதனால் சடலங்களை பொறுப்பேற்கச்சென்ற உறவினர்களுக்கும், வைத்தியசாலை நிர்வாகத்திற்குமிடையே பெரும் குழப்பம் ஏற்பட்டது.

ஆந்திரமாநிலத்தைச் சேர்ந்த வினோத்(13)துளசிராம் (14) ஆகிய இரண்டு சிறுவர்களும் அங்குள்ள ஆற்றில் நீராடிய வேளை நீரில் மூழ்கி உயிரிழந்தனர். இவர்களின் சடலங்களை மீட்டபொலிஸார் மெகபூப் நகர் மருத்துவமனையில் ஒப்படைத்தனர். அங்கு டாக்டர்கள் 2 பிணங்களையும் பரிசோதனை செய்துவிட்டு சவக்கிடங்குக்கு அனுப்பிவைத்தனர்.ஊழியர்கள் 2 பிணங்களையும் குளிர்பதனப்பெட்டியில் வைக்காமல் வெளியில் வைத்துவிட்டுச் சென்றனர். அப்போது பெருச்சாளிகள் சவக்கிடங்கில் புகுந்து 2 பிணங்களையும் தின்றன. அந்தச் சமயத்தில் உறவினர்கள் 2 பேரின் பிணத்தையும் பெறுவதற்கு அங்கு வந்தனர். பெருச்சாளிகள் பிணங்களைத் தின்று கொண்டிருப்பதைப் பார்த்ததும் ஆத்திரம் அடைந்தனர்.

பின்னர் அவர்கள் அங்குள்ள ஊழியர்கள், டாக்டர்களை கண்டித்து முற்றுகைப் போராட்டம் நடத்தினர். தகவல் அறிந்ததும் பொலிசார் விரைந்து வந்து அவர்களை சமரசப் படுத்தி அனுப்பி வைத்தனர். 2 சிறுவர்களின் பிணங்களைப் பெருச்சாளிகள் தின்ற சம்பவம் ஆந்திராவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# இந்திய குடியரசுத் தினநிகழ்வில் சோனியா பங்கேற்கவில்லை

(புதுடெல்லி)

டெல்லியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற குடியரசுத் தின நிகழ்ச்சியில் காங்கிரஸ் தலைவர் சோனியா கலந்து கொள்ளாதது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. குடியரசுத் தின அணி வகுப்பு நிகழ்ச்சி,குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற தேசியக் கொடி ஏற்றும் நிகழ்ச்சி ஆகிய இரு நிகழ்வுகளிலும் அவர் பங்கேற்கவில்லை.

இதுதொடர்பாக காங்கிரஸ் கட்சி சார்பிலோ, சோனியா தரப்பிலோ எந்தவித விளக்கமும் தரப்படவில்லை. எனினும், குடியரசு தின அணி வகுப்பு நிகழ்ச்சியில் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல்காந்தி கலந்து கொண்டார்.

# தேசிய கொடியேற்றலை தடுத்ததன் மூலம் பிரிவினைவாதிகளிடம் காஷ்மீர் அரசு சரணடைவு

## பாரதிய ஜனதா குற்றச்சாட்டு



(சென்னை)

குடியரசு தினத்தன்று லால் செக்கில் தேசியக் கொடி ஏற்ற பா.ஜ.க மேற்கொண்ட முயற்சியைத் தடுத்ததன் மூலம் ஒமர் அப்துல்லா தலைமையிலான ஜம்மு காஷ்மீர் அரசு பிரிவினைவாதிகளிடம் சரண் அடைந்துவிட்டது என பா.ஜ.க தலைவர்கள் குற்றம்சாட்டினர்.

ஜம்முவில் நிருபர்களிடம் அருண் ஜேட்லி, சுஷ்மா ஸ்வராஜ் ஆகியோர் நேற்றுமுன்தினம் பேசினர். அப்போது இவ்வாறு அவர்கள் குற்றம்சாட்டினர்.


பா.ஜ.க தேசியக் கொடி ஏற்றுவதைத் தடுத்து நிறுத்துவோம் என ஜே.கே.எல்.எப் எச்சரித்த நிலையில் மாநில அரசும் பா.ஜ.கவின் ஏக்தா யாத்திரையை (ஒருமைப்பாட்டு பேரணி) தடுத்து நிறுத்தியதை சுட்டிக்காட்டி மாநில அரசு பிரிவினைவாதிகளிடம் சரணடைந்து விட்டதாக குற்றம்சாட்டினர்.

ஜம்மு காஷ்மீரில் தேசியக் கொடி ஏற்றச் சென்றதற்காக நாங்கள் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டோம். தேசிய கொடியேற்றச் சென்றது குற்றமா? நெருக்கடி நிலைக்குப் பிறகு இப்போதுதான் முதன்முறையாக இதுபோல் நடந்துள்ளது.

மக்களவை, மாநிலங்களைவை எதிர்க்கட்சித் தலைவர்கள் குடியரசு தினத்தில் காவலில் வைக்கப்பட்டனர். இதற்கு மத்தியில் உள்ள காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும், ஒமர் அரசும் பதில் சொல்லியாகவேண்டும் என்றார் சுஷ்மா ஸ்வராஜ்.

தேசியக்கொடி ஏற்ற விடாமல் பா.ஜ.க தலைவர்களைத் தடுத்துவிட்டோம் என்ற தகவலைச் சொல்லி பிரிவினைவாதிகளை சாந்தப்படுத்துவதே மத்திய, மாநில அரசுகளின் நோக்கமாக இருந்துள்ளது என்றார் அருண் ஜேட்லி.

# கறுப்புப் பண பட்டியல் விவரத்தை மூடிமறைப்பதற்கு அரசு முயற்சி



(சென்னை)

வெளிநாட்டு வங்கிகளில் உள்ள இந்தியர்களின் கறுப்புப் பணப் பட்டியல் விவரங்களை மத்திய அரசு மறைக்க முயற்சிப்பதாக, பா.ஜனதா மூத்த தலைவர் அத்வானி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அத்வானி மேலும் கூறுகையில்,

சுப்ரீம் கோர்ட்டுக்குக் கூட இந்த பணத்தை பதுக்கி வைத்து இருப்பவர்களின் பெயர்ப் பட்டியலை வெளிப்படையாக மத்திய அரசு வழங்கவில்லை.

இந்தியர்களின் பெயரும் இடம்பெற்றுள்ள இதுபோன்ற மேலும் 4 கறுப்புப் பணப்பட்டியல் விவரங்களை வழங்குவதற்கு தயார் என்று ஜேர்மனி அரசு அறிவித்துளளது.

ஆனால், இந்திய அரசு தரப்பில் அதைப் பெறுவதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த விவகாரத்தில் எதையோ மூடி மறைக்க மத்திய அரசு முயற்சிக்கிறது. அதே நேரத்தில் கறுப்புப் பணபட்டியல் விவரங்களை வெளிப்படையாக அறிவிக்கவும் மத்திய அரசு விரும்பவில்லை என்றார்.

# நக்சலைட்டுக்களை ஒழிக்க பொலிசாருக்கு ஏ.கே.துப்பாக்கி

(புதுடெல்லி)

அசாம், பீகார், சதீஷ்கார், மராட்டியம் பொலிசாருக்கு ஏ.கே.47 ரக துப்பாக்கி வழங்கி நக்சலைட்டுகளை ஒழிக்க அதிரடித் திட்டமிடப்பட்டுள்ளது

பீகார், அசாம், சதீஷ்கார், மராட்டியம் உள்ளிட்ட மாநிலங்களில் நக்சலைட்டுகள் மற்றும் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். அவர்களை ஒடுக்க மாநில பொலிசாருக்கு நவீன ஆயுதங்கள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக மராட்டியம், அசாம், பீகார், சதீஷகார் ஆகிய மாநில பொலிசாருக்கு 57 ஆயிரத்து 500 ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக பல்கேரியன் துப்பாக்கி தயாரிக்கும் நிறுவனத்திடம் ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளது. இதே போல் நக்சலைட்டுகளை ஒடுக்க மாநில பொலிசாருக்கு நவீன தொலைதொடர்புக் கருவிகள் வாங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.



இந்தியாவின் 62ஆவது குடியரசுத்தினம் நேற்றுமுன்தினம் தமிழகத்திலும் கொண்டாப்பட்டவேளை, தமிழகமுதல்வர் கருணாநிதி, ஆளுநர் சுர்ஜித்சிங்பர்னாலா உட்பட்டோர்,நிகழ்வுகளைப் பார்வையிடுவதனையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஊர்திகளையும் காணலாம்.

# பொன்சேகாவின் வெற்றிடத்திற்கு ஜயந்த கெட்டகொட நியமனம்?

(கொழும்பு)

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவின் வெற்றிடத்திற்கு ஜயந்த கெட்டகொட நியமிக்கப்படக்கூடும் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவ நீதிமன்றம் நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்பிற்கு உட்பட்டது என உச்ச நீதிமன்றம் அண்மையில் அறிவித்திருந்தது.

இதன்படி, சரத் பொன்சேகா நாடாளுமன்ற ஆசனத்தை இழக்க நேரிடுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. எனினும், மேன் முறையீட்டு நீதிமன்றம் இந்த விவகாரம் தொடர்பான தீர்ப்பை இன்னமும் அறிவிக்கவில்லை. தீர்ப்பு அறிவிக்கப்படும் வரையில் சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற ஆசன வெற்றிடத்தை நிரப்புவதில்லை என ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருந்தது.

இதன்படி, விருப்பு வாக்குகள் அடிப்படையில் அடுத்த நிலையைப் பெற்றுக் கொண்டிருந்த லக்ஸ்மன் நிபுணாராச்சி பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவில்லை.

மூன்று மாத காலத்திற்குள் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளத் தவறியதனால் அடுத்தபடியாக விருப்பு வாக்குப் பெற்ற வேட்பாளர் இந்தப் பதவிக்குத் தகுதி பெற்றுக் கொள்வதாக அண்மையில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்திருந்தார்.

இதன்படி, ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்திற்கு ஜயந்த கெட்டகொட நியமிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜயந்த கெட்டகொடவும் பதவிப் பிரமாணம் செய்துகொள்ளத் தவறினால் அடுத்த படியாக விருப்பு வாக்குப் பெற்றுக் கொண்ட சரத் மனமேந்திராவிற்கு ஆசனம் கிடைக்கும் எனக் குறிப்பிடப்படுகிறது.

சரத் மனமேந்திரா அண்மைக் காலமாக கட்சிக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, குறித்த பாராளுமன்ற உறுப்பினர் பதவியை நிரப்புவதில் அவசரம் காட்டப்படமாட்டாது என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

# விசா பெற்றுத்தருவதாகக்கூறி மோசடி செய்த நால்வர் கைது

(கொழும்பு)

அமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகளில் உயர் கல்விக்கான விசா பெற்றுத் தருவதாக வாக்களித்து லட்சக்கணக்கில் மோசடி செய்த நால்வர் கொழும்பை அண்மித்த பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பை அண்டிய ஹொரணை மற்றும் நுகேகொடைப் பிரதேசங்களில் அவர்கள் தமது அலுவலகங்களை நடாத்தி வந்துள்ளதுடன், வார இறுதி செய்திப் பத்திரிகைகளில் கவர்ச்சிகரமான விளம்பரங்களை வெளியிட்டு வந்துள்ளனர்.

அவர்களின் ஏமாற்று நடவடிக்கையுடன் தொடர்புடைய இருவர் கனடா மற்றும் அமெரிக்காவில் வசிப்பதாக அறியப்பட்டுள்ளது.

இவர்களின் விளம்பரத்தை நம்பி வரும் மாணவர்களிடமிருந்து விசா பெற்றுத்தருவதற்கான கட்டணமாகப் பெருந் தொகைப் பணத்தைக்குறித்த வெளிநாட்டில் வசிப்பவர்களின் கணக்கு இலக்கங்களுக்கு வரவு வைக்குமாறு கூறப்படுகின்றது.

அதனை நம்பி வரவு வைக்கும் மாணவர்கள் அலைக்கழிக்கப்பட்டுள்ளனர். அதன் காரணமாகப் பலர் பொலிஸிலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

தற்போது அதன் உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# வகுப்பறைக் கட்டடம் அமைக்க அடிக்கல் நாட்டப்படவுள்ளது

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாளை சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நாட்டப்படவிருக்கிறது.

யுனிசெப் அரச சார்பற்ற நிதி வழங்கலுடன் 15 மில்லியன் ரூபா செலவில் இந்தப் புதிய வகுப்பறைக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் தாளையடி பங்குத்தந்தை அருட்திரு ஜேம்ஸ்நாதன் வடமராட்சி கிழக்கு கோட்டக்கல்வி அதிகாரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (70)

# இம் முறையும் நடத்தப்படவுள்ள சைவசமய செயன்முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் சைவசமய அறிவுப் பரீட்சை மற்றும் செயல்முறைப் பரீட்சை என்பன இவ்வருடமும் நடத்தப்படவுள்ளது.

இதில் சைவசமய அறிவுப் பரீட்சை தரம் 1 முதல் 13 வரையிலான மாணவர் மட்டத்திலும், கோலம்போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல்முறைப் போட்டிகள் வயது வேறுபாடின்றிச் சகலரும் பங்குபற்றும் வகையிலும் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

சைவசமய அறிவுப் பரீட்சையில் தரம் 3 முதல் 13 வரை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதியும் தரம் 1 முதல் 2 வரை எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதியும் நடைபெறவுள்ளதுடன், பரீட்சைகள் யாவும் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

இப்பரீட்சையில் தரம் 6 முதல் 13 வரையான வகுப்புகளில் அதிகூடிய புள்ளியைப் பெறும் ஒருவருக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

செயன்முறைப் போட்டி 10 முதல் 16 வயது வரை மத்திய பிரிவாகவும், 17 வயதிற்கு மேல மேற்பிரிவாகவும் நடத்தப்படவுள்ளதுடன், போட்டிக்குரிய பொருட்களைப் போட்டியாளர்கள் கொண்டுவர வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. போட்டிகள் மார்ச் மாதம் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதைவிடப் பரீட்சையிலும், போட்டியிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

பரிசில்கள் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதியன்று வழங்கப்படும். மேற்படி பரீட்சையிலும் போட்டிகளிலும் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழகம், அறிவகம் இல 82, நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன், ஒரு பாடசாலையில் இருந்து சைவசமய அறிவுப் பரீட்சைக்கு 100 மாணவர்கள் தோற்றுவார்களாயின் அப்பாடசாலையை ஒரு பரீட்சை நிலையமாக அமைத்துக் கொள்ளலாம். மற்றும் பாடசாலைகள் பரீட்சார்த்திகளின் பெயர்களைப் பட்டியலிட்டு விண்ணப்பிக்க வேண்டும் என சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பரீட்சைச் செயலாளர் சு.சிறிகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

# பொன்சேகாவின் வழக்கு விசாரணை சர்வதேச நீதிமன்றில் நியாயம் கோரல்

(கொழும்பு)


சரத் பொன்சேகா வழக்கு விசாரணைகள் தொடர்பில் சர்வதேச நீதிமன்றில் நியாயம் கோருவதற்கு தயங்கப் போவதில்லை என ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தேவை ஏற்பட்டால் சரத் பொன்சேகா விவகாரம் சர்வதேச நீதிமன்றங்கள் வரையில் கொண்டு செல்லப்படும் என ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இராணுவ நீதிமன்றத்தை அரசியல் சாசனத்தின் அடிப்படையில் நீதிமன்றமாக ஏற்றுக் கொள்வதா என்பது தொடர்பில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள போதிலும், சரத் பொன்சேகாவிற்கு இராணுவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புத் தொடர்பில் பதில் எதனையும் அளிக்கவில்லை' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கான முனைப்புக்கள் புதிய உத்வேகத்துடன் முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கல்



(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 26முன்பள்ளி ஆசிரியர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் கையளிக்கப்பட்டன.

அண்மையில் வடமராட்சி கிழக்குப்பகுதிக்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம், அங்குள்ள முன்பள்ளி ஆசிரியர்கள், தமது பிரயாண வசதி கருதி, துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவே, இவை வழங்கப்பட்டன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையின் அடிப்படையில் ஆளுனர் ஜீ.ஏ. சந்திரசிறி, 500 சுரைத்தடுகள் மற்றும் 26 துவிச்சக்கரவண்டிகளை அமைச்சரிடம் கையளித்தார்.

இவ்வாறு வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகளே, முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, அரச அதிபர் இமெல்டா சுகுமார், உள்ளூராட்சி மன்ற பிராந்திய ஆணையாளர் பு.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உலட்சம் ஏக்கர் நெல் வயல்கள் வெள்ளத்தினால் அழிந்தன

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் 200 000 ஏக்கர் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ள தாகவும் இந்நிலங்களில் விவசாயம் செய்வதற்காக மாத்திரம் விதைகள் மற்றும் பசளைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளதாகவும் விவசாய சேவைகள் ஆணையாளர் ரவீந்திர ஹேவா விதாரன தெரிவித்தார்.

இந்த வெள்ளத்தினால் 400 000 ஏக்கர் வயல்கள் நீரில் மூழ்கிய போதிலும் 200 000 ஏக்கர் முற்றாகச் சேதமடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் மொத்த நெல் உற்பத்தியில் 10 சதவீதமானவையே பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

## சுற்றுவட்டங்கள் அமைக்கும் பணி ஆரம்பம்

பயணிகளின் நன்மைகருதி வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் ஆவரங்கால் சந்தி மற்றும் வல்லை சந்திப்பகுதிகளில் சுற்றுவட்டம் அமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் போக்குவரத்து நெரிசல் அடிக்கடி ஏற்படும் மேற்படி இவ்விரு சந்திகளிலும் வீதி விபத்துக்களை தவிர்ப்பதற்காகவே இவ்வாறு சுற்றுவட்டங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வீதி அகலிப்பு காரணமாக விஸ்தீரணமாக்கப்பட்டுள்ள இவ்விரு பிரதான சந்திகளிலும் வீதி விபத்துக்களை தவிர்க்கும் வகையில் சுற்றுவட்டம் அமைக்கப்படவேண்டும் என தினமுரசு பத்திரிகையில் வெளிவந்த செய்திக்கு விரைவான பலன் கிடைத்திருப்பதையிட்டு பலரும் தமது மகிழ்ச்சியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர். (03)

# யாழ்.தேர்தல் களத்தில் கட்சிகளும், சின்னங்களும்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் உள்ளூராட்சித் தேர்தல் களத்தில் நேற்று நண்பகல் வரை பல அரசியல் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தன.

எனினும், உதவித் தேர்தல் ஆணையாளரினால் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களைத் தவிர தற்போதைய நிலையில், களத்தில் உள்ள எஞ்சிய அரசியல் கட்சிகளினதும், சுயேட்சைக் குழுக்களினதும் விபரங்களையும், அவற்றுக்கான தேர்தல் சின்னங்களையும் யாழ். தெரிவத்தாட்சி அலுவலகம் நேற்று மாலை அறிவித்தது.

இதன்படி ஐக்கிய தேசியக் கட்சி யானைச் சின்னத்திலும், இலங்கைத் தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்திலும், நவசமசமாஜக் கட்சி மேசைச் சின்னத்திலும், ஜே.வி.பி. கட்சி மணிச் சின்னத்திலும், ஐக்கிய சோசலிஷக் கட்சி முச்சக்கர வண்டிச் சின்னத்திலும், வல்வெட்டித்துறை நகர சபைக்குப் போட்டியிடும் குணசிங்கம் மேகனகுமார் கணினிச் சின்னத்திலும், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குப் போட்டியிடும் கந்தையா கணேசராசன் ஆமைப்பூட்டுச் சின்னத்திலும், சாவகச்சேரி பிரதேச சபைக்குப் போட்டியிடும் கந்தர் ஆறுமுகமான் சின்னத்திலும், சாவகச்சேரி நகரசபைக்குப் போட்டியிடும் அமரசேகரம் செல்வராசா அன்னாசிப் பழச் சின்னத்திலும், பருத்தித்துறை நகர சபைக்குப் போட்டியிடும் வேலனகுணரத்தினம் றோஸ் அப்பிள் சின்னத்திலும், பருத்தித்துறை பிரதேசசபைக்குப் போட்டியிடும் துரையன் தங்கவேலாயுதம் மாம்பழம் சின்னத்திலும் போட்டியிடவுள்ளதாகவும் யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் நேற்று மாலை தெரிவித்தார். (பா)

# அம்பாறை மாவட்டத்தில் 53 வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

(கொழும்பு)

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு 164 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இவற்றில் ஐந்து அரசியல் கட்சிகளினதும் 48 சுயேட்சை குழுக்களினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறை பிரதேச சபைக்கு இலங்கை தமிழரசுக் கட்சியி னால் தாக்கல் செய்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ள அதே வேளை, ஈழவர் ஜனநாயக முன்னணியினால் (ஈரோஸ்) காரைதீவு, திருக்கோவில் மற்றும் ஆலையடிவேம்பு போன்ற பிரதேச சபைகளில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களும், தெஹியத்த கண்டியில் ஜனசெத்த பெரமுனவினால் தாக்கல் செய்த மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## த.தே.கூட்டமைப்பின் சம்மாந்துறை வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் சம்மாந்துறை பிரதேச சபைக்கான வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளதாக எமது மாவட்ட செய்தியாளர் தெரிவித்துள்ளார். அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆறு பிரதேச சபைகளுக்காக வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தது. இந்நிலையில், சம்மாந்துறைக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

# வேட்பாளர் தெரிவு வன்முறையில் முடிவு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு மு.கா. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கையில் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்று அதிகாலைவரை ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, அங்கு கூடியிருந்த ஆதரவாளர்களிடையே கைகலப்புகளும் வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றன.

துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான ஒலுவில் கட்டட வளாகத்தில் மேற்படி தெரிவு நடவடிக்கை இடம்பெற்றது. இதன்போது வேட்பாளர் ஆசனங்களைப் பெறும் பொருட்டு அங்கு திரண்டிருந்தவர்களின் ஆதரவாளர்கள் சிலர் வன்முறையில் ஈடுபட்டனர்.

குறிப்பாக, பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த மு.கா. ஆதரவாளர் குழுக்கள் இரண்டினிடையே ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் மிக மோசமான கைகலப்பாக மாறியது.

இதேவேளை, அங்கு கூடியிருந்த மற்றுமொரு குழுவினர் - அவர்களின் ஊர் சார்பாக போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் தொடர்பில் அதிருப்தி கொண்டதையடுத்து அங்கிருந்த கதவு மற்றும் கண்ணாடிகளை உடைத்தனர்.

ஏற்கனவே, அம்பாறை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்குரிய வேட்பாளர்களுக்கான நேர்முகத் தேர்வுகள், நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ் மற்றும் பைசால் காசிம் ஆகியோரின் தலைமையில் நடந்து முடிந்த நிலையிலேயே, மு.கா. தலைவர் மீண்டும் இந்தத் தேர்வினை நடத்தினார்.

நேற்று அதிகாலை 3.00 மணியளவிலேயே வேட்பாளர்கள் குறித்த இறுதித் தீர்மானங்கள் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தண்டனை வழங்கும்...

கருத வேண்டும் என உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இராணுவ சட்டத்தின்படியே இராணுவ நீதிமன்றம் ஸ்தாபிக்கப்படுகிறது. உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் உள்ளிட்ட நீதிமன்றங்கள் அரசியல் அமைப்பின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டவை. இதனால் தண்டனை வழங்கும் அதிகாரம் இருப்பதால் மாத்திரம் இராணுவ நீதிமன்றம் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அரசியல் அமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதிமன்றமா என்ற கேள்வி எழுகிறது.

நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தண்டனையின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோகும் என அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ளது. இதில் இடைகேள்விகள் எழுகின்றன. மக்கள் தமது வாக்குப் பலத்தில் தமது பிரதிநிதிகளை நாடாளு மன்றத்திற்கு அனுப்புகின்றனர். மக்களின் வாக்குரிமையின் மூலம் தெரிவு செய்யப்படும் பிரதிநிதியின் பதவி இராணுவ நீதிமன்றத்தினால், பறிக்கப்படுமானால், அது மக்களின் உரிமைகளை இல்லாமல் செய்யும் நடவடிக்கை ஆகும்.

1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட நீதிமன்ற அமைப்புகள் சட்டத்தின் கீழ் உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம் என்பன ஸ்தாபிக்கப்படுகின்றன.

அரசியல் அமைப்பின் பிரகாரம் நீதிமன்றம் குறித்து வரைவிலக்கணப்படுத்தும் போது, நீதிமன்றத்தை சாதாரண நிலையில் இருந்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். நீதிமன்றத்திலும் மக்களின் பலமே செயற்படுகிறது. சாதாரணமாக இராணுவ நீதிமன்றம், சிவில் நீதிமன்ற கட்டமைப்புக்குள் உள்ளடங்காது.

.மனித உரிமை சாசனத்தின்படி பக்கசார்பற்ற பகிரங்க நீதிமன்றத்தின் மூலமே தண்டனை வழங்க முடியும். இராணுவ நீதிமன்றத்தின் செயற்பாடுகளும், சிவில் நீதிமன்றத்தின் செயற்பாடுகளும் வித்தியாசமானவை.

இராணுவ நீதிமன்றம் என்பது சுயாதீனமான நிறுவனம் அல்ல. சிவில் நீதிமன்றம் சுயாதீனமானது. இந்த நீதிமன்றத்தை வழிநடத்தும் அதிகாரிகளும் சுயாதீனமானவர்கள். இராணுவ நீதிமன்றத்தின் நீதிபதிகளை நியமிப்பது ஜனாதிபதி, அந்த நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புக்கும் கையெழுத்திடுபவரும் ஜனாதிபதி, இராணுவ நீதிமன்றம் என்பது நிறைவேற்று அதிகாரத்தின் சபை. அத்துடன் இராணுவ நீதிமன்றத்தின் நீதிபதிகள் நிறுவனத்திற்குள் உள்ளடங்குபவர்கள், இராணுவ நீதிமன்றத்தின் நீதிபதிகள் இறுதியில் இராணுவ தளபதியின் உத்தரவிற்கு அடிபணிய வேண்டியேற்படும்.

தண்டனை வழங்கும் நடவடிக்கையை மாத்திரம் கவனத்தில் கொண்டு, உயர்நீதிமன்றம், இராணுவ நீதிமன்றத்தை அரசியலமைப்புக்கு உட்பட நீதிமன்றம் என்ற தீர்ப்பை வழங்கியுள்ளது எனவும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.ம.சு.மு.வின் நுவரெலியா, தலவாக்கலை வேட்பு மனுக்களும் நிராகரிப்பு

(கொழும்பு)

நுவரெலியா பிரதேச சபை மற்றும் லிந்துலை, தலவாக்கலை நகர சபைக்கான ஐக் கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்பு ஒதுக்கப் பட்ட ஆட்சேபனை தெரிவிக்கும் நேரத்தில் நுவரெலிய பிரதேச சபைக்கும், தலவாக்கலை, லிந்துலை நகரசபைக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தாக்கல் செய்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

அதேபோல், மலையக மக் கள் முன்னனியின் தலவாக்கலை, லிந்துலை நகரசபைக்கும் கொத்தமலை பிரதேச சபைக்கும் தாக்கல் செய்த வேட்புமனுவும் ஜனநாயக ஐக்கிய முன்னனியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வேட்பு மனுவும் மேலும் 11 சுயேட்சைக் குழுக்களின் வேட்புமனுக்களும் தேர்தல் சட்ட திட்டங்களுக்கு அமைவாக பூர்த்தி செய்யப்படாமையால் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும், மாவட்ட செயலாளருமான டீ.பீ.ஜி. குமாரசிறி இவ் மூன்று மனுக்களையும் நிராகரித்தார்.

## ஆளும் கட்சியின் வேட்பு...

People's Freedom Alliance) செயலாளர் ஏ.டி.சுசில் பிரேமஜெயந்த ஒப்பமிட்டுள்ளதுடன், கட்சியின் உத்தியோகபூர்வ றப்பர் முத்திரையும் இடப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று, யாழ்.தேர்தல் மாவட்டத்தில் நவசமசமாஜக் கட்சியின் ஒரு பிரதேசசபையினரும், சுயேட்சைக் குழுக்கள் மூன்றினதும் வேட்பு மனுக்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஐ.தே.கட்சியின் ஒரு பிரதேச சபையினதும், தமிழரசுக் கட்சியின் இரு பிரதேச சபைகளுக்கான வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

யாழ்.உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகள் நேற்றுக் காலை 10 மணியிலிருந்து தமது வேட்பு மனுக்களை யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்தன.

இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுச் செயலாளருமான மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் உள்ளிட்டவர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்) சட்டத்தரணி ரங்கன் ஆகியோரும்,


ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும், மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பெரியதம்பி சந்திரசேகரன், நவசமசமாஜக் கட்சியின் சார்பில் அபிமன்யு மாணிக்கசோதி மற்றும் சுயேட்சைக் குழுவினரும் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)

## உள்ளூராட்சி மன்றத்...

எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக கடத்தல், கொலை, கொள்ளை மற்றும் கப்பம் கோரல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் இடம் பெற்று வருவதுடன் அவை தனிப்பட்ட தேவை கருதிய சம்பவங்களாகவே அமைந்துள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளன.

இந்நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்துள்ள அதேவேளை, குடாநாட்டின் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் படையினர் தங்களது பங்களிப்புக்களை வழங்கி வருகின்றனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# மக்கள் நீதிமன்றமே இறுதித் தீர்ப்பு வழங்கும்

## ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு கூறுகிறது



(கொழும்பு)

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவிற்கு மக்கள் நீதிமன்றமே இறுதித் தீர்ப்பை வழங்க வேண்டிய நிலை வந்திருப்பதாக ஜனநாயக தேசியக் கூட்டணி தெரிவித்துள்ளது.

சரத் பொன்சேகா நாட்டுக்காக அர்ப்பணிப்பு செய்தாரா? சேவையாற்றினாரா? விடுதலைக்கு போராடினாரா? ஜனநாயகத்தை பாதுகாக்க முற்பட்டாரா? இல்லையா என்ற முடிவினை எடுக்க வேண்டியவர்கள் மக்களே.

எனவே தற்போது எவ்வாறான தீர்ப்புகள் வந்தாலும் அவரது விடயத்தில் மக்கள் நீதிமன்றங்களே தீர்ப்பு வழங்க வேண்டும் என ஜனநாயக தேசியக் கூட்டணியின் சார்பில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில், கூட்டணியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனநாயகம், நீதி, நேர்மை என்பனவற்றை இந்த நாட்டில் நிலைநாட்ட முடியாத நிலைமையை இன்றைய குடும்ப ஆட்சியாளர்கள் ஏற்படுத்தியுள்ளனர். கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பேராதரவு இருந்தபோதும் சரத் பொன்சேகா வஞ்சகமாகத் தோற்கடிக்கப்பட்டார். யுத்தம் நிறைவடைந்த பின்னரும் ஜனநாயகம் இல்லாது போயிருக்கின்றமையை உணர்ந்து, மீண்டும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த முயன்றபோதும் எமது முயற்சி வெற்றியளிக்கவில்லை.

தற்போது இராணுவ நீதிமன்றம் அரசியலமைப்பிற்கு அமைவானது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேலும் பொன்சேகாவின் பதவி தொடர்பான மற்றுமொரு வழக்கொன்றும் மேன்முறையீட்டு நீதிமன்றில் நிலுவையில் உள்ளது.

நீதிமன்றம் தற்போது அளித்துள்ள தீர்ப்பு பொன்சேகாவை விடுவிக்க கோரும் போராட்டங்களுக்கான முற்றுப்புள்ளியாக நாம் கருதவில்லை. மாறாக இந்த தீர்ப்பு அவரை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உத்வேகத்தை அளித்துள்ளதாகவும் போராட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

# நீதியாக தேர்தலை நடாத்தி கௌரவமாக ஓய்வுபெறுங்கள்

## ஐ.தே.க. விடுக்கும் கோரிக்கை



(கொழும்பு)

நீதியானதும் நியாயமானதுமான முறையில் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்துமாறு தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவிடம் ஐ.தே.க. கேரிக்கை விடுத்துள்ளது. இதன் மூலம் அவர் கௌரவமாக ஓய்வு பெற முடியும் என ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

இம்முறை நீதி, நியாயமாக தேர்தலை நடாத்துவதன் மூலம் தேர்தல் ஆணையாளர் கடந்த காலங்களில் ஏற்பட்ட கறைகளை நீக்கிக்கொள்ள முடியும் என நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க. பிரதிதித்தலைவர் கருஜயசூரிய கூறினார்.

# மலையகத்தில் தமிழ்க் கட்சிகள் புது வியூகம் 'மலையக தமிழ்க் கூட்டமைப்பு' உதயம்

நுவரெலியா மாவட்டத்தின் ஐந்து பிரதேச சபைகளிலும் இரண்டு நகரசபைகளிலும் போட்டியிடும் முகமாக மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியும் எஸ்.சதாசிவம் தலைமையிலான இலங்கை ஜனநாயக ஐக்கிய முன்னணியும் இணைந்து மலையக தமிழ்க் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

அம்பகமுவ பிரதேச சபை, ஹங்குரன்கெத்த பிரதேச சபை, ஹட்டன் - டிக்கோய நகரசபை, தலவாக்கலை, லிந்துலை நகர சபை ஆகியவற்றில் ஏணி சின்னத்திலும், நுவரெலியா பிரதேச சபை, கொத்மலை பிரதேச சபை, வலப்பனை பிரதேச சபை ஆகியவற்றில் மீன் சின்னத்திலும் இந்த மலையக தமிழ் கூட்டமைப்பு போட்டியிடுமென இக் கூட்டமைப்பின் தலைவர்களான மனோகணேசனும், எஸ்.சதாசிவமும் நுவரெலியாவிலிருந்து தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினமும், நேற்றும் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்களை ஜனநாயக மக்கள் முன்னணி பொதுச்செயலாளர் கலாநிதி நல்லையா குமரகுருபரனும், இலங்கை ஜனநாயக ஐக்கிய முன்னணி பொதுச்செயலாளர் எஸ்.சதாசிவமும் கையளித்தனர்.

இந்த கூட்டமைப்பில் நவ சமசமாஜய கட்சி சார்பாக ஒரு வேட்பாளரும் அம்பகமுவ பிரதேச சபைக்காக போட்டியிடுகின்றார்.

# துப்பாக்கி முனையில் கொள்ளை; இத்தாலி சுப்பர்மார்க்கெட்டில் சம்பவம்

இலங்கையர் ஒருவரால் இத்தாலியில் நடத்தப்படும் கடை ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு கொள்ளை இடம்பெற்றுள்ளது.

சுப்பர் மார்க்கெட் மூடப்படும் நேரத்தில் கைக்குட்டை ஒன்றால் முகத்தை மறைத்துக் கொண்டு வந்த ஆயுதாரி ஒருவர் துப்பாக்கி முனையில் ரொக்கப் பணத்தை கொள்ளை அடித்து உள்ளார்.

பணப்பெட்டிக்குள் இருந்த 200 அமெரிக்க டொலரை கடை உரிமையாளரை மிரட்டி இவர் கொள்ளையடித்தார். பின் வேகமாக ஓடி மறைந்தார். இவர் 30 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட ஒரு நபர் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# நாடு திரும்பினார் ஜனாதிபதி



(கொழும்பு)

தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை 4.55 மணியளவில் UL 228 என்ற விமானத்தின் மூலம் நாடு திரும்பியுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# யாழில் நியாயமான தேர்தல் நடைபெறுமா?

## ஜே.வி.பி. சந்திரசேகரன் கேள்வி

(யாழ்ப்பாணம்)

யாழில் தற்போதுள்ள சூழ்நிலையை பார்க்கும் போது, ஏனைய பிரதேச சூழல்கள் போல் அல்லாது நேரடியாக அடக்குமுறைமிக்க ஒரு சூழலை காணக் கூடியதாக உள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். செயலகத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்து விட்டு ஊடகவியலாளர் மத்தியில் அவர் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்துள்ளார். மேலும், இவ்வாறான அடக்குமுறையான சூழலிலே நியாயமான தேர்தல் நடைபெறுமா என்கிற சந்தேகம் எழுந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது யாழில் உள்ள வேட்பாளர்கள் மீது பல்வேறு முறையிலான அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்படுகிறது. ஆகவே இத்தேர்தலில் பாரியதொரு மாற்றத்தைச் செய்தாக வேண்டும்.

அவ்வாறு செய்தால் மக்களது பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஒரு மாற்று சக்தியை பலப்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாகும். அவ்வாறானதொரு மாற்றத்தை ஏற்படுத்தவே மக்கள் விடுதலை முன்னணி போராடும் என அவர் தெரிவித்துள்ளார்.

# மோசடியான தொழில்வாய்ப்பு லொத்தர்; பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் எச்சரிக்கை

மோசடியான தொழில்வாய்ப்பு, லொத்தர் வெற்றி அறிவிப்புகள் குறித்து கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகரகம் ஊடக அறிக்கையொன்றின் மூலம் பொதுமக்களை எச்சரித்துள்ளது.

லொத்தர் மற்றும் தொழில்வாய்ப்பு மோசடிகள் உலகெங்கும் அதிகரித்து வருவதாக தோன்றுகிறது. இல்லாத தொழில வாய்ப்பு மற்றும் லொத்தர் வெற்றி அறிவிப்புகள் மூலம் பெரும் எண்ணிக்கையானோர் ஏமாற்றப்படுகின்றனர் என்பதே துயரமான உண்மையாகும்.

வருடாந்தம் 30 லட்சம் பேர் மோசடிகளால் பாதிக்கப்படுவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. சராசரியாக 850 ஸ்ரேலிங் பவுண்களை ஒவ்வொருவரும் இழக்கின்றனர்.

சிலவேளை இதைவிட அதிகமாகவும் இழக்கின்றனர் என பிரித்தானிய உயர் ஸ்தானிகரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



सत्यमेव जयते

CONSULATE GENERAL OF INDIA
JAFFNA

Presents
Nalacharitham
(Second Day)

A KATHAKALI Performance
by
P.S.V.Natyasangam
Kottakal, Kerala, India

On
Sunday 30th January 2011 6.30 p.m.
At Jaffna University Auditorium, Jaffna

Entry:- Free

Supported by the Ministry of Culture and Arts
Government of Sri Lanka (C/415)







இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.